அன்பளிப்பு 40P

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை 02-07-1993

உள்ளே......


- விழுதுகள் – மேஜர் அருந்ததி
- சிறுகதை – 'எப்போது விடியும்'
- இரண்டாவது பலிப்போர்
- எங்கள் நினைவுகளும் இனியுள்ள தேவைகளும்
- நகரின் மத்தியில் நடந்த கோரம்
- ஐரோப்பிய சமூக நாடுகளும் வெளிநாட்டு அகதிகள் நிலையும் (2)
- தேதக்கு நேர் – போராக்கு புனர்வாழ்வு நிலைத்தில்


# "தமிழ்த்தேசியம் நிலைபெற்று விட்டது அது முன்னோக்கித்தான் செல்லும்"

## வியன்னா சர்வதேச மையத்தில் லோறன்ஸ் திலகர் சூளுரை

"தமிழ்த் தேசியம் நிலை பெற்றுவிட்டது. அது முன்னோக்கித் தான் செல்லும். வரலாறு மீண்டும் மீண்டும் அரங்கேறலாம். ஆனால் வரலாற்றை பின்னோக்கி நகர்த்த முடியாது"



இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேசப் பேச்சாளர் லோறன்ஸ் திலகர், உலக மனித உரிமைகள் மாநாடு நடைபெற்ற வியன்னா சர்வதேச மையத்தில் நடாத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் சூளுரைத்தார். "45 வருட கால சிங்கள ஆட்சியாளர்களின் தமிழ் மக்கள் மீதான இனஒடுக்கு முறை, இனப்படுகொலை என்ற வடிவத்தை அடைந்து தொடர்ந்து இடம்பெற்று வருகிறது.

பொருளாதாரத்தடை, குடியேற்றங்கள், கல்வியில் தரப்படுத்தல், மொழிப்புறக்கணிப்பு, படுகொலைகள், பொதுமக்கள் மீது தொடுக்கப்பட்டுள்ளன என்ற ரீதியில் இனப்படுகொலை தற்போது இடம்பெற்று வருகிறது" என விளக்கிய அவர், விடுதலைப் புலிகள் சமாதான ரீதியான பேச்சு வார்த்தையின் மூலம் பிரச்சனையைத் தீர்வுக்கு கொண்டுவருவதற்கு எப்போதும் தயாராக இருப்பதாகவும் பத்திரிகையாளர்களுக்கு எடுத்துரைத்தார்.

சர்வதேச கல்வி நிறுவனத்தின் சார்பில் ஆனி 24ம் திகதியன்று மகாநாட்டில் கலந்துகொண்டு அறிக்கை வாசித்த அன்ரன் பொன்ராஜா, "சுயநிர்ணய உரிமைத் தத்துவம் இன்றைய உலகில் பெரும் சவாலை எதிர்கொண்டு வருகின்றது. அவ்வுரிமையை சர்வதேச சட்டவரையறையினுள் நெறிப்படுத்த அரசாங்கங்கள் மத்தியில் விருப்பமின்மை காணப்படுகின்றது. சுயநிர்ணய உரிமை என்பது பிரிவினை அல்ல. தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை தனிஇனவாதமாக சிறீலங்கா அரசின் அறிக்கை சித்தரித்திருந்தது. இனவாத அரசாங்கங்களுக்கு எதிராக ஒரு மக்கள், ஆயுதப் போராட்டத்தை நடத்துவதும் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுவதும் சர்வதேசச் சட்ட வரையறையினுள் அடங்கும்" என வாதிட்டார். 'மக்கள்' என்பதற்கான வரைவிலக்கணம் சர்வதேசச் சட்டத்தினுள் தனி இனமென வரையறுக்கப்பட்டுள்ளது என்பதையும் அவரது அறிக்கை ஆணித்தரமாக எடுத்து விளக்கியது.

உலக சமாதான அமைப்பு என்ற சர்வதேச மனித உரிமை அமைப்பு ஒழுங்கு செய்த அறிக்கை, 120 மனித உரிமை அமைப்புக்களினால் கூட்டாகக் கைச்சாத்திடப்பட்டு, உலக மனித உரிமைகள் மாநாட்டுத் தலைவரிடம் கையளிக்கப்பட்டது. இவ்வறிக்கையானது, சிறீலங்கா அரசாங்கம் வடக்கு-கிழக்கில் இடம்பெறும் ஆயுத முரண்பாட்டிற்கு இராணுவ ரீதியாகவே தீர்வுகாண முயல்வதைக் கண்டித்ததோடு, இலங்கைத் தீவானது இரண்டு நாடுகளாகப் பிரிவதற்கு நெருக்கமாக வந்துள்ளதாகவும் எடுத்துக்காட்டியது. தமிழ் மக்கள் மீது கடலாலும், தரையாலும், ஆகாயத்தாலும் தொடுக்கப்பட்டுள்ள தாக்குதல்களை கண்டித்ததோடு மின்சாரத்தடை, மருந்து, எரிபொருள், ஆகிய 42க்கு மேற்பட்ட பொருட்கள் மீதான அரசாங்கத்தின் தடையையும் அவ்வறிக்கை கண்டித்துள்ளது. இவ்வறிக்கையானது, சிறீலங்கா அரசாங்கம் உடனடியாக பொருளாதாரத் தடையையும் நீக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தது. மேலும், யுத்த நிறுத்தம் கொண்டு வரப்பட்டு, பேச்சுவார்த்தைகள் நடைபெற வேண்டும் எனவும், தமிழ் மக்களின் பிரச்சினை, மனித உரிமைகளின் அடிப்படையிலும், சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும் தீர்க்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தது.

உலக சமாதான அமைப்பின் பிரதிநிதிகளில் ஒருவராக வந்த செல்வி மான் என்பவர் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் கூறுகையில், "உலகில் தேசிய இனங்களின் விடுதலை சம்பந்தப்பட்டதும், சுயநிர்ணய உரிமை குறித்ததுமான பிரச்சினையே முதன்மை வகிக்கிறது. ஆயினும், மகாநாட்டிலோ, மகாநாட்டுத் தீர்மானத்திலோ அதற்குரிய முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்றே கருதுகின்றேன். இது, ஏமாற்றத்தை அளிக்கிறது. ஆனால் ஏராளமான மனித உரிமை அமைப்புகளைச் சந்திக்க இம்மகாநாடு உதவியுள்ளது" என்று தெரிவித்தார்.

'தேசிய, உள்நாட்டு உத்தியோகத்தரின் அமைப்பு' என்ற மனித உரிமைகள் அமைப்பு தமிழ் மக்களின் போராட்டத்தை ஆதரித்து பத்திரிகை அறிக்கை ஒன்றை வெளியிட்டது. இவ்வறிக்கை சிங்களக் குடியேற்றங்களையும் ஆயுதப்படைகளினால் மக்கள் கொல்லப்படுவதையும், காணாமல் போவதையும் கண்டனமாகக்

தொடர்ச்சி 14ம் பக்கம் ....



## விடுதலைப்புலிகளின் பலத்தாலும் ராஜதந்திரத்தாலும் பொருளாதாரத்தடையும் தளர்ந்தது

தமிழீழ மக்கள் மீது கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக சிறீலங்கா அரசாங்கம் அமுல்படுத்திவந்த 'பொருளாதாரத் தடை' புலிகளின் பலத்துடன் கூடிய இராஜதந்திரத்தால் உடைக்கப்பட்டது.

புலிகள் கைது செய்து காவலில் வைத்திருந்த 38 சிங்களப் பொலிசாரும் 01 இராணுவத்தினரும், கடந்த மூன்று ஆண்டுகளாக தம்மை விடுவிப்பதற்கு முயற்சி எடுக்காத சிறீலங்காவின் அலட்சியத்தை கண்டித்துச் சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர்.

இதனை இராஜதந்திரத்துடன் அணுகிய விடுதலைப் புலிகள் கைதிகள் விடுதலை தொடர்பாக பேசவந்த சிறீலங்கா இராணுவத்தின் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் ஆனந்த வீரசேகராவுடன் யாழ்ப்பாணத்தில் வைத்துப் பேச்சுக்களை நடத்தினர். விடுதலைப் புலிகளின் சார்பில் அன்டன் பாலசிங்கமும் தமிழ்ச்செல்வனும் நடாத்திய இப்பேச்சுவார்த்தையில் பொருளாதாரத்தடை நீக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. கொழும்பு திரும்பிய ஆனந்த வீரசேகரா, கூட்டுப் படைத் தளபதி கமிஸ்டன் வணசிங்க பொருளாதாரத்தடை நீக்கப்படுவதைக் கொடுத்த உறுதிமொழிக் கடிதத்துடன் யாழ்ப்பாணத்திற்கு மீண்டும் வந்தார். விமானத்திற்குத் தேவையான பொருட்கள், மருந்துவகைகள்,

தொடர்ச்சி 14ம் பக்கம் ....



யாழ்ப்பாணத்திலுள்ள யுத்தக்கைதிகள் தங்கள் இறைவழிபாட்டின்போது ......

# 14 நாட்களில் 8301 பேர் கைது

- கொழும்பில் தமிழர்க்கு பாதுகாப்பற்ற நிலை
- வவுனியாவுடன் தமிழர் நகர்வுக்கு தடை

சிறீலங்காவின் தலைநகரான கொழும்பில் வாழும் தமிழர்களுக்குப் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டுள்ளது. பதின்நான்கு நாட்களில் 8301 தமிழர்கள் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டுள்ளனர். இவர்களுள் 2400 பேர் நீதிமன்றத்தின் முன் கொண்டு வரப்பட்டு பின்னர் சிறைக்கூடங்களில் அடைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளனர். மிகுதியானவர்கள் பொலிசாருக்கு வழங்கப்பட்டிருக்கும் "தடுத்து வைக்கும்" அதிகாரத்தினைப் பயன்படுத்தி நீதிமன்றத்தின் முன் கொண்டுவரப்படாது காவல் நிலையங்களிலேயே தகுந்த காரணமின்றி அடைக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

## வாழ்வுக்கான போராட்டம்

தமிழீழ மண்மீட்புப் போர் என்பது, இலங்கைத் தீவில் வரலாற்றுக்கு முன்பிருந்து வாழும் தமிழர்களின் வாழ்வுக்கான போராட்டம். இதனை நிரூபிக்கக் கூடிய வகையில் கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் நடந்த சிங்கள யுத்தக் கைதிகளின் விடுதலை சம்பந்தமான சம்பவங்கள் அமைந்துள்ளன.

மூன்றாண்டு காலமாக, சிறீலங்கா அரசாங்கம் இந்த 39 யுத்தக் கைதிகளின் விடுதலை குறித்து எவ்வித அக்கறையும் காட்டவில்லை. இந்நிலையில் 39 பேரும் கூட்டாக, தமது சுயவிருப்பின் பேரில் தமது விடுதலை குறித்து, சிறீலங்கா அரசு காட்டும் அலட்சியத்தைக் கண்டித்தும், தமது விடுதலையை யாசித்தும் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். இவ்வேளையில், இவர்களைப் பார்க்க விரும்பிய இவர்களது பெற்றோர், உறவினர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மனிதாபிமான அடிப்படையில் அனுமதி வழங்கியதும் அல்லாமல், அவர்கள் சுதந்திரமாக தமிழீழ மண்ணில் தங்கியிருப்பதற்கும் வசதிகள் செய்து கொடுத்தனர். இதனால் தமிழீழ விடுதலைப் புலிகள் இனவாதிகள் என சிறீலங்கா அரசு பரப்பி வந்த வதந்திக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது.

இது தொடர்பான சிங்கள மக்களின் அழுத்தம் காரணமாகவும், இப்படையினருக்கு ஏதேனும் நடந்தால் முன்பே விரக்தியுடன் இருக்கும் சிங்களப் படையினர் இடையே விரக்தி நிலை மேலும் அதிகரிக்கும் எனவும் சிறீலங்கா அரசு எண்ணியது. தாம் படையினரை பகடைக் காய்களாக உருட்டுகின்ற உண்மை நிலையை உணர்ந்து, அவர்கள் படைகளில் இருந்து விலகலாம் என்ற அச்சத்தாலும் சிறீலங்கா அரசு இராணுவப் படையின் புனர்வாழ்வு ஆணையாளரை யாழ்ப்பாணத்திற்கு இது குறித்துப் பேசவென அனுப்பியது.

இந்நேரத்தில், இலங்கைத் தமிழர்களின் வாழ்வுக்கான போராட்டத்தை இராணுவப் படைப்பலப் பிரயோகத்தாலும், பொருளாதாரத்தடை என்னும் முற்றுகை யுத்தத்தாலும் அழிக்க நினைத்த சிறீலங்கா அரசின் சதிச் செயலை முறியடிக்க தமிழீழ விடுதலைப் புலிகள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினர். கைதிகள் பரிமாற்றம் தொடர்பாக, பொருளாதாரத்தடையை தளர்த்த வேண்டும் என்பதை ஒரு நிபந்தனையாக முன்வைத்தனர். இதற்கு இணக்கம் தெரிவித்த சிறீலங்கா அரசு, கூட்டுப்படைத் தளபதி கமில்டன் வணசிங்கா மூலம் ஒரு உறுதி மொழிக் கடிதத்தை வழங்கியது. இதையேற்ற விடுதலைப் புலிகள் நல்லெண்ணம் கருதி, தமது சார்பாக ஐந்து பொலிசாரை விடுதலை செய்தனர். ஏழு வகையான பொருட்கள் மீதான தடைகளை அகற்றிய சிறீலங்கா அரசு 500 பீப்பா மண்ணெண்ணெயையும் லொறிகளில் கிளிநொச்சிக்கு அனுப்பியது. கப்பலொன்றையும் பருத்தித்துறை நோக்கி விவசாய உபகரணங்கள், எரிபொருட்கள் போன்ற பொருட்களுடன் அனுப்பிவிட்டதாக அறிவித்தது.

ஆயினும் இந்தப் பொருளாதாரத் தடை நீக்கம் சிறீலங்கா இராணுவத்தின் போர் வெறிக்குணமுள்ள ஒரு சாராருக்கு திருப்தி அளிக்கவில்லை. முதல் நாள் தாண்டிக்குளத்தினூடாக பொருட்களைக் கொண்டு செல்ல அனுமதித்தவர்கள், மறுநாள் அவைகளைத் தடைசெய்துள்ளனர்.

இதனால், விடுதலைப் புலிகளுக்கு அளிக்கப்பட்ட உறுதி மொழியைச் செயற்படுத்துவதிலிருந்து சிறீலங்கா அரசு தவறத் தொடங்கியுள்ளது. பருத்தித்துறையில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில், பொருட்களை இறக்கலாம் என்றே அக்கப்பல் பருத்தித்துறை நோக்கி அனுப்பப்பட்டது. ஆனால், பிந்திய செய்திகளின்படி அக்கப்பல் திருகோணமலையில் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

தாண்டிக்குளத்தினூடாக பொருட்களை எடுத்துச் செல்வதில் மட்டுமல்ல, பொருட்களை ஏற்றிச் செல்லும் கப்பலின் இறங்குதுறை பற்றியும் குழப்பமானதொரு நிலையே காணப்படுகிறது. இந்நிலையில் அரசியல் உரிமை அளிப்பதற்கென சிறீலங்கா அரசு செய்துகொண்ட ஒப்பந்தங்களின் கதிதான், இந்த பொருளாதாரத்தடை நீக்க வாக்குறுதிக் கடிதத்திற்கும் நேருமோ என்ற அச்சம் பரவலாக ஏற்படத் தொடங்கியுள்ளது.

இந்நிலையில் தமிழீழ மக்களின் வாழ்வுக்குத் தடையாக இருப்பதே சிறீலங்கா அரசின் நோக்கம் என்ற கருத்து மீளவும் வெளிப்படையாகின்றது. சிறீலங்கா அரசு புலிகள் வசமுள்ள யுத்தக் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக, பரஸ்பர கைதிகள் பரிமாற்ற யோசனை ஒன்றையே முன்வைத்தது. ஆனால், புலிகள் அரசியல் இலாபம் சம்பந்தமாக எந்த நிபந்தனையையும் முன்வைக்கவில்லை. மக்கள் நலன் கருதி பொருளாதாரத்தடையை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையினையே முன்வைத்தனர். இதன் மூலம் புலிகளின் மக்கள் நலன் பேணும் போக்கும், சிறீலங்கா அரசின் மக்கள் விரோதப்போக்கின் தன்மையும் அப்பட்டமாகத் தெரியவந்துள்ளது.

பொருளாதாரத்தடை, விடுதலைப் புலிகளின் போராளிகளையோ போராட்டத்தையோ தளர்வடையச் செய்யவில்லை. எந்தத்தடையையும் மீறிப் போராடும் தார்மீகப் பலமும் தியாக உணர்வும் புலிகளுக்கு உண்டு. ஆனால் சாதாரண பொதுமக்கள் தான் இத்தடை மூலம் தமது நாளாந்த வாழ்வில் அவலங்களைச் சந்தித்து வந்தனர். இதனை மாற்றி மக்கள் நலனைப் பேணுவதற்காகத்தான் சிறீலங்கா அரசிடம், பொருளாதாரத்தடையை நீக்கும் நிபந்தனையை முன்வைத்தனர்.

மேலும் யுத்தக் கைதிகள் பிரச்சினை ஒரு மனிதாபிமானப் பிரச்சினை என்றால், தமிழ் மக்கள் வாழ்வின் தேவைகளை அடைவதும் ஒரு மனிதாபிமான பிரச்சினைதான். ஆகவே மனிதாபிமானப் உணர்வுகட்கு சிறீலங்கா அரசுதான் தடையாக உள்ளது என்ற உண்மையை உலக சமுதாயமும், இலங்கைக்கு உதவிபுரியும் நாடுகளும் உணர்ந்துகொள்ளல் வேண்டும்.

எது எப்படி இருப்பினும் எந்தத்தடைகளையும் மீறி, போராடும் பலமும் இராசதந்திரமும் புலிகளுக்கு உள்ளவரை தமிழீழ மக்களைப் பாதுகாக்கும் அவர்களின் உறுதியை யாராலும் அழிக்க முடியாது. ■

பிந்திக்கிடைத்த செய்தி:

# யுத்தக்கைதிகள் விடுதலையில் தாமதம்?

விடுதலைப் புலிகளிடமுள்ள எஞ்சிய யுத்தக்கைதிகளை (34 பேர்) விடுதலை செய்யும் நோக்கமாக கடந்த வாரம் காணப்பட்ட இணக்கப்பாட்டை, சிறீலங்கா அரசு மீறியுள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். கைதிகள் பரிமாற்றத்திற்குப் பதிலாக தடைநீக்கப்பட்ட பொருட்கள், கிரமமான முறையில் வடபகுதிக்கு கொண்டு வரப்படும் என சிறீலங்கா அரசு அளித்த உறுதியைக் கடைப்பிடிக்கத் தவறிவிட்டது.

தாண்டிக்குளம் தடைமுகாமினூடாக, தடைசெய்யப்பட்ட பொருட்களை எடுத்துச் செல்வதற்கு மீண்டும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் புதிய துவிச்சக்கர வண்டிகள் உட்பட தாம் வாங்கிய பொருட்களுடன் ஆயிரக்கணக்கான மக்கள் வடபகுதிக்குச் செல்லமுடியாமல் பெரும் ஏமாற்றத்துடன் வவுனியாவில் தங்கியுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. விடுதலைப் புலிகளுடன் மேற்கொள்ளப்பட்ட உடன்பாட்டின்படி, கடந்த ஞாயிறு கொழும்பிலிருந்து அத்தியாவசியப் பொருட்களுடன் புறப்பட்டு பருத்தித்துறையை நோக்கிச் சென்ற கப்பல் திருகோணமலையில் மறித்து வைக்கப்பட்டுள்ளதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த விடுதலைப் புலிகள், "வழமைபோல் சிறீலங்கா அரசு உடன்பாட்டை மீறிவிட்டது. இது எமக்கு ஆச்சரியம் தரவில்லை. இது வரலாறு காட்டும் உண்மை." எனத் தமது செய்தியில் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, எஞ்சியுள்ள 34 கைதிகளும் மீண்டும் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கக்கூடும் எனவும் அறியப்படுகின்றது. கைதிகளின் விடுதலைக்குப் பின்னரே எஞ்சியுள்ள அவர்களது உறவினர்கள் ஐம்பது பேரும், கொழும்பு திரும்புவோம் என அடம்பிடிக்கலாம் எனவும், இது சிறீலங்கா அரசுக்கு சிக்கலை ஏற்படுத்தலாம் எனவும் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். கைதிகள் விடுதலை, பொருளாதாரத்தடை நீக்கம் தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையில் நிலவும் முட்டுக்கட்டை நிலையை அகற்ற, செஞ்சிலுவைச் சங்கம் முயற்சிகளை எடுத்து வருவதாகவும் அறியப்படுகிறது. ■

# யாழ். வைத்தியசாலைக்கு ஜெனரேற்றர்கள்

■ கொழும்பிலிருந்து எடுத்து வர முயற்சி

யாழ். போதனா மருத்துவமனைக்கு, கொழும்பிலிருந்து இரண்டு புதிய மின்பிறப்பாக்கிகள் எடுத்துவரப்படவுள்ளன. இதற்கான முயற்சிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படும் 'குமாரி' என்ற கப்பலில் இவ்விரண்டு மின்பிறப்பாக்கிகளும் தருவிக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒவ்வொன்றும் சுமார் 200 கே. வி. மின்சாரத்தைப் பிறப்பிக்கக்கூடியவை என்று கூறப்படுகிறது. கொள்வனவு செய்யப்பட்டு நீண்டகாலமாக இவை கொழும்பில் காத்துக் கிடந்ததாகவும் இவற்றைக் கப்பலில் ஏற்றுவது அல்லது இறக்குவதில் சில சிரமங்கள் இருப்பதாகவும் தெரியவருகிறது. கப்பலில் பொருத்தப்பட்டிருக்கும் பாரம் தூக்கியின் தூக்குதிறன் போதாமல் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

அதேவேளை, மேற்படி விடயம் குறித்து நடவடிக்கை எடுப்பதற்கும் தற்போது பழுதடைந்த நிலையில் யாழ் வைத்தியசாலையில் இருக்கும் மின்பிறப்பாக்கியை திருத்துவதற்கான நடவடிக்கை குறித்து ஆராய்வதற்கும் வைத்தியசாலை [illegible] மருத்துவ அதிகாரிகள் குழு ஒன்று கொழும்பு விரைந்துள்ளது. ■

# காலப்பதிவு இலக்கியங்கள் கலைஞர் படைக்க வேண்டும்

■ புதுவை இரத்தினதுரை கோரிக்கை

"நாம் எவ்வளவு இன்னல்கள் மத்தியில் எமது சுதந்திரத்தைப் பெற்றோம் என்பதை எமது வருங்காலச் சந்ததியினருக்கு உணர்த்த வேண்டும். இதற்கு நாம் காலப்பதிவு இலக்கியங்களைப் படைக்க வேண்டும்." இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் வெளியிடப்பட்ட 'இது எங்கள் தேசம்' என்ற வீடியோ பட வெளியீட்டு விழாவில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

நாம் எவ்வாறு எமது சுதந்திரத்திற்காகப் போராடினோம், எவ்வளவு இன்னல்களுக்கு ஆளானோம் என்பதையெல்லாம் எமது வருங்காலச் சந்ததியினருக்கு நாம் புரியவைக்க வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு எமது சுதந்திரத்தின் பெறுமதி தெரியும். அதற்காக எம் மத்தியில் உள்ள எழுத்தாளர்களும், கலைஞர்களும் தம்மாலான பணியை ஆற்ற வேண்டும். இல்லையேல் எமது வருங்காலச் சந்ததி எமது போராட்டத்தைப் பற்றியும், அதன்பெறுமதி பற்றியும் அறியாது. நாம் எவ்வளவோ இன்னல்களை அனுபவித்து எவ்வளவோ இழப்புக்களின் மத்தியில் நாம் பெற்ற சுதந்திரத்தை விற்றுவிடவும் கூடும். சில நாடுகளில் இப்படியும் நிகழ்ந்துள்ளது.

இதனால் எம் மத்தியில் காலப் பதிவு இலக்கியம் படைக்கப்பட வேண்டும். எழுதும் ஆற்றல் உள்ளோர் அனைவரும் தமது திறமைகளை வெளிக்கொணர வேண்டும். நாம் சர்வதேச மட்டத்திற்கு எழுத வேண்டும் என்றில்லை. எம் கண்முன் நடக்கின்ற நிகழ்வுகளை கவிதையாகவோ நாவலாகவோ நாம் படைக்க வேண்டும். காலப்பதிவு இலக்கியத்தின் தேவையை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும் என்றார். ■

## விருப்பத்திற்கு மாறாக தமிழ் அகதிகள் வெளியேற்றப்பட்டனர்.

கடந்த மூன்று வருடங்களாக கொழும்பு விவேகானந்தாக் கட்டடத்தில் தங்கியிருந்த தமிழ் அகதிகள், தமது சொந்த விருப்பத்திற்கு மாறாக சிறீலங்கா அரசால் வெளியேற்றப்பட்டுள்ளனர். இங்கே தங்கியிருந்த 109 குடும்பங்களைச் சேர்ந்த 348 பேரும் மட்டக்களப்புக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்குள்ள நாவலடி என்ற கிராமத்தில் அவர்களைத் தங்க வைக்க சிறீலங்கா அரசால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 109 குடும்பங்களைத் தங்கவைப்பதற்குப் பதிலாக 41 குடும்பங்கள் தங்குவதற்குத் தேவையான கிடுகுக் கொட்டில்களே அமைக்கப்பட்டுள்ளதாகவும் அதனால், அதிகாரிகள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டுள்ளதாகவும் கொழும்புப் பத்திரிகை கருத்து வெளியிட்டுள்ளது.

தமிழ் அகதிகள் இவ்வாறு வெளியேற்றப்படுவது, கொழும்பிலிருந்து தமிழ் மக்களை விரட்டும் செயற்பாடுகளின் ஓர் அம்சமாக இருக்கலாம் எனவும் கருதப்படுகிறது ■

### பதிலடி

வீதி வெடிக்கும்
மரம் வெடிக்கும்
நின் பாதம்
படும் இடமெலாம்
வெடிக்கும்.
எம் மக்கள்
அனுமதியின்றி
வருவோர் விதி
முடிக்கும்
இவை
சாவும் கொடுக்கும்
பதிலடிகள்!

தூயவன்

# புலிகளின் துணிகரத் தாக்குதல்கள் படையினருக்கு குழப்பம்

■ மன்னார் மாவட்டத் தளபதி கதிர் தெரிவிப்பு

விடுதலைப் புலிகள் சிறீலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் சென்று அண்மைக் காலங்களில் மேற்கொண்ட துணிகரத் தாக்குதல்கள் இராணுவத்தினருக்கு குழப்ப நிலையையும் வியப்பையும் ஏற்படுத்தியுள்ளன.

இவ்வாறு மன்னார் மாவட்ட தளபதி கதிர் புலிகளின் குரல் வானொலிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இப்பேட்டியில், மன்னார் மாவட்ட இராணுவத்திற்கு எதிராக புலிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பற்றி கேட்டபோது மேற்கண்டவாறு தெரிவித்த தளபதி மேலும், தெரிவிக்கையில்:
20 மைல் நீளமான இராணுவ வேலியை அமைத்து இருக்கும் இராணுவத்தினர் அப்பகுதிகள் தமது பூரண கட்டுப்பாட்டில் உள்ளதாக அடிக்கடி கூறிவருகின்றனர். ஆனால், நாம் அண்மைக் காலமாக மன்னார் தீவிற்குள் சென்று நடத்திய அதிரடி தாக்குதல்கள், தள்ளாடி இராணுவமுகாமுக்கும் மன்னார் பாலத்திற்கும் இடையில் அமைந்திருந்த கடல் வழிப்பாதையில் வைத்து நடத்திய தாக்குதல்கள் இராணுவத்தினருக்கு பெரும் உயிரிழப்புக்களை ஏற்படுத்தியுள்ளன. பெருமளவு ஆயுதங்களையும் நாம் கைப்பற்றியுள்ளோம்.

சிறீலங்கா இராணுவத்தின் அண்மைக்கால நடவடிக்கைகளால் மன்னார் மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்கள் பெரும் பொருளாதார கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர். இப் பகுதி மக்கள் விவசாயம், மற்றும் மீன்பிடி தொழிலையே முக்கிய தொழிலாகக் கொண்டுள்ளனர். இராணுவ நடவடிக்கைகளால் 5000 ஏக்கருக்கு மேற்பட்ட நெல் வயல்களை விட்டு மக்கள் வெளியேறியுள்ளனர். மீன்பிடித் தொழிலும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இராணுவத்தினர் கிராமப்புற வீடுகளுக்குள் புகுந்து அவர்களின் சொத்துக்களை கொள்ளையடித்ததுடன் வீடுகளையும் சேதமாக்கியுள்ளனர்.

மன்னார்தீவில் இராணுவ பிடிக்குள் சிக்கியுள்ள தமிழ் மக்களின் நிலைபற்றி கேட்டபோது அங்கு அடிக்கடி ஊரடங்கு உத்தரவு பிறப்பித்து புலிகளைத் தேடுகிறோம், புலிகளை அழிக்கப் போகிறோம் எனக்கூறி இத் தமிழ் மக்களைக் கைது செய்கின்றனர். அண்மையில்கூட பேசாலை முகாமுக்குள் புகுந்து புலிகளின் ஆதரவாளர் எனக் கூறி 6 பேரைக் கைது செய்து பூசாமுகாமுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இம் மக்கள் சுதந்திரமாக தமது கடமைகளைச் செய்ய முடியாத நிலையில் உள்ளனர். மாலை 6 மணிக்கு பின்னர் மக்கள் நடமாட இராணுவம் தடைவிதித்துள்ளது. இதனால், 24 மணி நேரமும் மக்கள் பீதியுடனேயே வாழ்கின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் அண்மையில், சிறீலங்கா அரசின் பொருளாதார தடைக்கு எதிராக மடு மற்றும், தச்சனாமருதமடு அகதிமுகாம் மக்கள் பெரியளவில் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை நடத்தினர். மற்றும் அன்னை பூபதி தினம், தொழிலாளர் தினம் ஆகியவற்றில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டு தமது எழுச்சியை வெளிப்படுத்தினார் என்றார். ■

# உணவு கொண்டு செல்ல பொதுமக்களுக்குத் தடை

வாகரைப் பகுதிக்கு அத்தியாவசியப் பொருட்கள் எடுத்துச் செல்ல சிறீலங்கா இராணுவத்தினர் கட்டுப்பாடு விதித்துள்ளனதாகவும் போக்குவரத்திற்கு தடைவிதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பிலிருந்து வாகரைக்கு பஸ் சேவையை நடத்தக் கூடாது என மட்டக்களப்பு இ.போ.ச. டிப்போவை இராணுவம் கேட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து வாழைச்சேனையில் இருந்தே வாகரைக்கு தற்போது காலையும் மாலையுமாக இரு தடவை பஸ் சேவை நடாத்தப்பட்டு வருகிறது.

இதேவேளை ஒருவர் ஒரு கொத்து அரிசி, அரைப் போத்தல் மண்ணெண்ணெய், இரு தீப்பெட்டி, ஒரு கிலோ சீனி என்ற அளவிலேயே கொண்டு செல்ல இராணுவம் கட்டுப்பாடு விதித்துள்ளது. வியாபாரிகள் கூடுதலான பொருட்களை வாகரைக்கு எடுத்துச்செல்ல இராணுவம் அனுமதி வழங்குவதில்லை. மீறிக் கொண்டு சென்ற சிலர் இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ■

# யாழ் - வன்னி தொடர்பு: மூன்று இடங்களில் செயலகம்

நெருக்கடிகால யாழ் - வன்னி தொடர்பு சேவைக்கான செயலகங்கள் மானிப்பாய் வீதியில் ஈழநாடு காரியாலயத்திற்கு அண்மையிலும், கிளிநொச்சியில் கரடிப்போக்குச் சந்திக்கு அண்மையிலுள்ள கட்டடத்திலும், மேலும் தகவல் கையேற்கும் கருமபீடம் ஓமந்தை சோதனை நிலையத்திலும் இயங்கும் என தமிழீழ விடுதலைப்புலிகள் போக்குவரத்துப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வலுவலகங்கள் அலுவலக நேரங்களில் வாரத்தின் ஏழு நாட்களும் திறந்திருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ■

# கொழும்பிலிருந்து வந்த கொப்பிகள் மாணவருக்கு வழங்கப் போதாதாம்

யாழ் கல்வித் திணைக்களத்தால் குடாநாட்டு மாணவர்களுக்காக, கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்ட அப்பியாசக் கொப்பியில் இருந்து, மாணவன் ஒருவனுக்கு ஒரு பாடத்திற்கு ஒருசில ஒற்றைகள்தான் வழங்கக்கூடியதாக உள்ளதாக கல்வித் திணைக்கள வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது. இதுபற்றி மேலும் தெரியவருவதாவது: குடாநாட்டில் ஏற்பட்ட கொப்பித் தட்டுப்பாட்டை அடுத்து, அதை நீக்கும் முகமாக யாழ் கல்வித்திணைக்களம் கொழும்பிலிருந்து கொப்பியை எடுத்துவந்து, மாணவர்களுக்கு வழங்குவது எனத் தீர்மானித்தது. இதன் அடிப்படையில் மாணவன் ஒருவருக்கு எவ்வளவு கொப்பி தேவை என்றும் அதிபர்கள் மூலம் தரவுகள் பெறப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது. ஒரு மாணவனுக்கு ஆகக்குறைந்தது 8 கொப்பிகள் என்றாலும் தேவை என்ற அடிப்படையில், குறைந்தது 16 இலட்சம் அப்பியாசக் கொப்பிகளாவது மாணவர்களுக்குத் தேவை. இந்நிலையில் யாழ் கல்வித் திணைக்களத்தால் கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்ட கொப்பியோ ஒரு இலட்சம்தான். இந்தக் கொப்பியை மாணவர்களுக்குப் பகிர்ந்து வழங்குவதானால் அக் கொப்பிகளை கழற்றி ஒரு பாடத்திற்கு ஒருசில ஒற்றைகள் என்ற அடிப்படையிலேயே வழங்கப் போதுமானதாக இருக்கும் என்ற அதிர்ச்சி தரும் விடயம் தெரியவந்துள்ளது. ■

■ வவுனியா விமானத்தள விஸ்தரிப்பு

வவுனியா விமானத்தள விஸ்தரிப்புக்காக, கடந்த சில ஆண்டுகளாக அதைச்சுற்றியுள்ள தமிழர் காணிகள் சிறீலங்கா அரசினால் சுவீகரிக்கப்பட்டு வந்துள்ளன. தற்போது இக்காணிகளுக்கு வட கிழக்குப் பகுதியிலுள்ள கோவிற்புதுக்குளம் தச்சன்குளம் ஆகியவற்றில் வாழும் தமிழ் மக்களை வெளியேறுமாறு சிறீலங்காப் படை அறிவித்துள்ளது. இத்தகைய தமிழர் மண்பறிப்பு நடவடிக்கையை தடுத்து நிறுத்துமாறு, வவுனியா பிரசைகள் குழுத்தலைவர் சிறீலங்கா ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவிடம் கோரிக்கை விடுத்துள்ளார் என அறியப்படுகின்றது. ■

# ஆரம்ப விஞ்ஞானக் கல்விக்கு போதிய ஆசிரியர் இல்லை

யாழ். [illegible] பாடசாலைகளில் ஆரம்ப விஞ்ஞானக் கல்வி கற்பிக்க ஆரம்பித்து ஆறு வருடங்களுக்கு மேல் ஆகின்றன. ஆனால், 6.25 சத வீதமான ஆரம்ப விஞ்ஞான ஆசிரியர்கள்தான் தொடர்ச்சியாக ஐந்து வருடங்களுக்கு மேல் இப்பாடத்தை கற்பித்து வருகிறார்கள். ஆரம்ப விஞ்ஞானக் கல்வியைக் கற்பிப்பதற்குத் திருப்திகரமான முறையில் ஆசிரியர்களை வழங்கத் தவறியமையே இந்த நிலைக்கான காரணமாகும். எமது பாடசாலைகளில் அடிக்கடி நடைபெறும் ஆசிரியர் இடமாற்றமும் இதற்கான மற்றொரு காரணமாகும். இவ்வாறு யாழ். பல்கலைக்கழக கல்வித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கே. சின்னத்தம்பி தெரிவித்தார்.

யாழ். விஞ்ஞானக் கழகம் சார்பில் நடைபெற்ற கருத்தரங்கில், "யாழ். கல்விவட்டத்தில் ஆரம்ப விஞ்ஞானக் கல்வி கற்பித்தல்" என்னும் பொருள்பற்றி ஆய்வுரை நிகழ்த்தும் போது அவர் இவ்வாறு கூறினார்.

பாடப்பொருள் பற்றிய அறிவு கற்பித்தல் முறையில் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும். க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைதல் ஆசிரியர் நியமனத்துக்கான அடிப்படைத் தகைமையாகும். ஆரம்ப விஞ்ஞான ஆசிரியர் மேற்படி பரீட்சையில் விஞ்ஞான பாடத்தில் சித்தியடையாவிடினும், குறைந்தபட்சம் விஞ்ஞானத்தைப் படித்திருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த வகையில் பார்த்தால் 51.6 சதவீதமான ஆரம்ப விஞ்ஞான ஆசிரியர்களுக்குப் போதிய அளவு விஞ்ஞானக் கல்வி அறிவு இல்லையென்றார். ■

# குமணவில் குடிகொண்ட வெளிநாட்டுத் தபால் பொதிகள்!

கடந்த மாதம் 'குமண' கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட சுமார் 60க்கும் மேற்பட்ட தபால் பொதிகள் கொழும்பில் இறக்கப்படாமல், சுமார் ஒரு மாத காலம் கப்பலிலேயே தவம் கிடந்து மீண்டும் அதே கப்பல் மூலம் பருத்தித்துறையைச் சென்றடைந்தன.

இந்தச் சம்பவம்பற்றித் தெரியவருவதாவது:
குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால் பொதிகளை அங்கிருந்து 'குமண' கப்பலில் யாழ் பிரதம தபால் ஊழியர்கள் அனுப்பி வைத்தனர்.

'குமண' கப்பல் கொழும்பு துறைமுகத்தைச் சென்றடைந்ததும் அந்தப் பொதிகளைக் கப்பலில் இருந்து இறக்குவதற்கான அனுமதி கோரப்பட்டதாகவும் -

ஆனால் கடற்படையினரும் கொழும்பு தபாலக அதிகாரிகளும் அதற்கான அனுமதியை வழங்காது இழுத்தடித்தனர் என்றும் -

அதனையடுத்து அந்தத் தபால் பொதிகள் இறக்கப்படாமல் கப்பலிலேயே ஆதரவற்றுக் குடிகொண்டிருந்தன என்றும் அறியப்படுகின்றது.

இந்த இழுபறிக்கு மத்தியில் யாழ்ப்பாணத்திற்கான வெளியூர் தபால் பொதிகளை ஏற்றாமல் 'குமண' கப்பல் கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்குத் திரும்பியுள்ளது. ■

# 'செல்'லை உடைத்த இளைஞர் உடல் சிதறிப் பலி

பழைய இரும்புக்கடை ஒன்றினுள் கிடந்தெடுத்த வெடிக்காத 'செல்' ஒன்றை சுத்தியல் கொண்டு அடித்து உடைக்க முயன்றவர் அது வெடித்ததில் உடல் சிதறிப் பலியானார். அவர் இருந்த வீடும் சேதமடைந்தது.

இப்பரிதாப சம்பவம் யாழ்ப்பாணம் [illegible] பகுதியில் இடம்பெற்றது. இதன்போது ஞானம் சுரேந்திரன் (வயது 13) என்னும் பாடசாலை மாணவனே பலியானவராவார். மேலும் ஞானம் கிருபா (வயது 8), சிவபாதசுந்தரம் விஜிதா(வயது 2) என்னும் சிறுவர்கள் காயமடைந்தனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:
பலகாலமாக மூடிக்கிடந்த பழைய இரும்புக்கடை ஒன்றை திறந்து வியாபாரம் செய்யும் நோக்குடன் அதற்குள் கிடந்த இரும்புச் சாமான்களை அகற்றிக் கொண்டிருந்தபோது மேற்படி 'செல்' கிடப்பதைக் கண்டதும் அதை எடுத்து தூர எறிந்து பார்த்தாராம். பல முறை எறிந்து பார்த்தபின் பலியானவர் அதைத் தனது வீட்டின் பின்புறம் எடுத்துச் சென்று அடித்து உடைக்க முயற்சித்தபோதே அது வெடித்தது. பலியானவரின் தலைச்சிதறல்கள் அவர் இருந்த வீட்டின் கூரையில் ஒட்டிக் கிடந்தன. தலையும் இரு கால்களும் வேறு வேறு இடங்களில் கிடந்ததாக காணப்பட்டது. ■

# தையிட்டியில் சிக்கியிருந்த நால்வர் விடுவிப்பு

வலி வடக்கில் படையினரிடம் சிக்குண்டவர்களில் நால்வர் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக உறவினர்களைப் பிரிந்து அங்கு சிக்குண்டிருந்த தையிட்டிப் பகுதியைச் சேர்ந்த நான்கு குடும்பப் பெண்களே விடுவிக்கப்பட்டவர்கள் ஆவர். செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரால் இவர்கள் யாழ் கூட்டிவரப்பட்டனர்.

இளையதம்பி தெய்வானை (வயது 69), சின்னையா செல்லம்மா (வயது 71), செல்லையா ஆச்சிப்பிள்ளை (வயது 68), முதலித்தம்பி செல்லம்மா(வயது 65) ஆகிய நால்வரும் காங்கேசன்துறையிலிருந்து 'குமண' கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு அழைத்துவரப்பட்டனர். ■

# "புக்காரா" குண்டு வீச்சு பொருள்கள் எரிந்தன

ஆலங்கேணியில் கடந்த [illegible] பகுதிகள் மீது சிறீலங்கா விமானப்படையினரின் "புக்காரா" விமானங்கள் குண்டுத்தாக்குதல் நடாத்தியுள்ளதாகத் தெரியவருகின்றது.

இத்தாக்குதலின் போது பொதுமக்களின் பல பெறுமதி வாய்ந்த பொருள்கள் தீக்கிரையானதாகவும் அறியவருகின்றது.

மேற்படி கடற்கரையோரமாகக் களஞ்சியப் படுத்திவைக்கப்பட்டிருந்த பொருட்கள் மீது குண்டுகள் வீழ்ந்து வெடித்ததில் இவை தீக்கிரையானதாகவும், இதனால் பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் நாசமாகியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ■

# நகரின் மத்தியில் நடந்த கொடூரம் தமிழர் கலை பொக்கிசம் தீக்கிரை

**1981 மே 31 ஆம் திகதியன்று இரவு சிறிலங்கா அரசின் பொலிசாராலும் ஆளுங்கட்சிக்குச் சார்பான காடையர்களாலும் யாழ்ப்பாண பொது நூல் நிலையம், ஈழநாடு பத்திரிகை அலுவலம் உட்பட நகரின் முக்கிய பகுதிகள் தீக்கிரையாக்கப்பட்டும், வெடி வைத்துத் தகர்க்கப்பட்டதுமான சம்பவங்கள் நிகழ்ந்தேறின. பண்பாட்டுப் படுகொலையின் சின்னமான அச்சம்பவம் பற்றிய நினைவாக :**

நான்கு புறமும் இருக்கும் விசாலமான தார் வீதிகளில் வாகனங்கள் விரைந்து செல்லும்.

சுப்பிரமணியம் பூங்காவும், மத்திய கல்லூரியின் விளையாட்டு மைதானமும், புல்லுக்குளமும், கோட்டை முனியப்பர் கோவிலும், துரையப்பா விளையாட்டு அரங்கமும், மாநகராட்சி மன்றக் கட்டடமும் சூழ்ந்திருக்க அவற்றினிடையே நடுநாயகமாய் உயர்ந்திருந்த இரண்டு மாடிக் கட்டடம்.

ஒரு புறத்தே திறந்த வெளிக் கலையரங்கம், மறுபுறத்தில் டென்னிஸ் மைதானமுமாக வெள்ளைத் தாமரையில் கல்வித்தாய் அமர்ந்திருப்பாள் வீணை வாசித்தபடி.

அதனைக் கடந்து பார்வையைச் செலுத்தினால் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற பொதுநூல் நிலையம் என்ற பெயர் வரவேற்கும்.

வாசலைக் கடந்து உள்ளே நுழைந்தால் தினசரிப் பத்திரிகைகள் இருக்கும் பகுதி ஒரு புறத்திலும், நூல்கள் இரவல் கொடுக்கும் பகுதி மறுபுறத்திலும், இவற்றிற்கு அப்பால் சிறுவர் பகுதியுமாக தரைத் தளம். காலை ஏழு மணிமுதல் மாலை ஏழு மணிவரை சனத்திரள் மொய்த்தவண்ணம் இருக்கும்.

மாடிப்படிகளில் ஏறி மேலே போனால் உடனுதவும் பகுதியும், கேட்போர் கூடமும் என பரந்த பிரதேசம். எங்கும் நிசப்தம் குடிகொண்டிருக்கும். ஒரு குண்டூசி விழுவதுகூடப் பேரோசையாய் எதிரொலிக்கக் கூடியளவிற்கு அங்கு நிசப்தம் நிலவும். பண்ணைக் கடலைத் தழுவிவரும் இதமான தென்றல் காற்று, மேனியைத் தொட்டுத் தடவிச் சுகமளிக்க, புத்தகங்களின் இதழ்களுக்குள் முகம் புதைத்து அறிவுக்கடலின் ஆழம் தேடுவதில் முனைந்திருப்போரால் கதிரைகள் நிரம்பி வழியும்.

இப்படித்தான் யாழ்ப்பாணத்துப் பொது நூல் நிலையத்தின் அன்றைய காட்சி இருந்தது. நினைவுத் திரையில் மின்னலாய் மேலெழுகிறது.

ஆனால், இந்தக் காட்சிகள் பழங்கதையாய்ப் போய் பன்னிரண்டு ஆண்டுகள் அதற்குள் பறந்தோடிப் போய்விட்டன.

நகரத்தின் மத்தியில் ஒரு பண்பாட்டுப் படுகொலை.

நாகரிக மனிதன் வெட்கித் தலைகுனிய -காக்கிச் சட்டைகளின் கோரத்தாண்டவம்.

1981 மே 31-ன் இரவு முடிந்து, காலைக் கதிரவன் தன் பொற்கிரணங்களைப் பரப்பத் தொடங்கியபோது சுமார் ஒரு இலட்சம் புத்தகங்களும் எரிந்துபோன சாம்பலைத்தான் காற்று நாலா திசைகளிலும் காவிச் சென்றது.

யாழ்ப்பாண நகரம் மீண்டும் எரிவதாய் வானொலிச் செய்திகள் முணுமுணுத்து ஓய்ந்தன.

தமிழீழம் கேட்டு 'கூட்டணி'



கண்டவர்கள் மாவட்ட அபிவிருத்தி சபைகளின் முன்பு மண்டியிட்டு நின்ற வேளை அது.

வீராவேசப் பேச்சுக்களுக்கு முட்டை கட்டி வைத்த கூட்டணிக்காரர்கள் எல்லை போட முன்பு பெருகிவரும் சிங்களக் குடியேற்றம் என்ற வெள்ளத்தைத் தடுக்க அணை போடப் போடுவதாய், பதவிகளுக்காக போதனைகள் புரிந்து கொண்டிருந்த காலம் அது.

அபிவிருத்திதானே முக்கியம். அதற்காக ஆளுங்கட்சியை ஆதரிப்பதில் என்ன தவறு என்று ஐ.தே.கவும் அதன் அடிவருடிகளும் வினா எழுப்பி இருந்த சூழல் அது.

இந்த நிலையில்தான் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரதானமான பிரச்சினை, அவர்களது பாதுகாப்பும் அதற்கான உத்தரவாதமும் தான் என்பதை முகத்தில் அறைந்ததுபோல எடுத்துக்காட்டிய நிகழ்ச்சியாக யாழ்ப்பாண நூல் நிலைய எரிப்பு இடம்பெற்றது.

யார் இந்த நூல் நிலையத்தை எரித்தார்கள்?

காமினி திசநாயக்காவும், லலித் அத்துலத்முதலியும் இன்னும் அவர்களது ஆதரவாளர்களும் இந்த நூல் நிலைய எரிப்புக்கு காரணகர்த்தாக்களாகவும், உடந்தையாகவும் இருந்தார்கள் என்று பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் - அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து தூக்கி எறியப்பட்ட பின்னர் -அப்போதைய ஜனாதிபதி பிரேமதாசா பகிரங்கமாகவே குற்றஞ்சாட்டினார்.

மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலுக்காக ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் பிரசாரப் பணிக்கென அனுப்பிவைக்கப்பட்ட அமைச்சர் குழாம், அப்போது யாழ்ப்பாணத்தில் முகாமிட்டிருந்தது என்றும், தேர்தல் கடமைகளுக்கு என்ற போர்வையில் தென்னிலங்கையிலிருந்து காடையர்கள் கொண்டுவரப்பட்டு குவிக்கப்பட்டிருந்தனர் என்றும் பிரேமதாசா தமது குற்றச்சாட்டுக்களுக்கான ஆதாரங்களை மேலும் சுட்டிக் காட்டினார்.

மிரட்டியும், விரட்டியும், உதைத்தும், மிதித்தும் நுழைத்தும் தமிழ் மக்களைப் பணிய வைத்துவிடலாம் என்று கனவு கண்ட சிங்களப் பேரினவாதம் தமிழர் தாயகத்தில் நெருப்பு மூட்டியது. ஓங்கி உயர்ந்த தீச்சுவாலைகளைக் கண்டு தமிழ் மக்கள் தொடை நடுங்கிப் போவார்கள் என்று கங்கணம் கட்டினர் அவர்கள். ஆனால், அந்தக் கனவுகளும், திட்டங்களும் இந்த மண்ணில் ஜெயித்துவிடவில்லை. சாம்பல் பூத்த தெருக்களில் இருந்து புயற்பறவைகள் கிளம்பின.

காலம் நகர்ந்தது.

அரசின் பாதுகாப்புப் படைகளால் நாசமாக்கப்பட்ட அந்த நூல் நிலையத்தின் இடிபாடுகளும், அத்திவாரமும்கூட போருக்குத் துணையாயிற்று.

இடிபாடுகளுக்குள்ளிருந்தும், அத்திவாரக்கற்களோடு உறவு கொண்டும் கோட்டைக்குள் குடியிருந்த கொடியவரின் பாசறை நோக்கி எறிகணைகள் பறந்தன.

தன்னை நாசமாக்கிய பகைவர்களை நாசமாக்கிப் பழிவாங்கும் நோக்கில், நூல் நிலையத்தின் ஒவ்வொரு கற்களும்கூட மண்ணின் மைந்தர்களுக்கு பாதுகாப்பு வழங்கிற்று.

எந்தக் கோட்டைக்குள் இருந்து புறப்பட்டு வந்தோரால் நூல் நிலையம் தீக்கிரையாக்கப்பட்டதோ அவர்கள் இப்போது அங்கில்லை. ஆனால், எரியுண்ட நூல் நிலையக் கட்டடத்தின் எஞ்சிய பகுதிகள் இன்னும் அங்கே, எதிர்கால சந்ததிகளுக்கு நினைவுச் சின்னமாய் நிமிர்ந்து நிற்கிறது. ■

- இளையவன்

நன்றி ஈழநாதம்

# இரண்டாவது பனி....

அதாவது இனரீதியாக, மதப்பிரிவு ரீதியாக, அரசியல்ரீதியாக பல முரண்பாடுகளைக் கொண்டிருந்தபோதிலும் பெரும்பாலான முஸ்லீம் நாடுகள் (உலகின் மிகப் பெரிய முஸ்லீம் நாடான இந்தோனேசியா மற்றும் மலேசியா போன்ற நாடுகள் இதற்குள் அடங்கவில்லை.) ஒரு பொது (தொடர்) நிலப்பரப்பில் அமைந்துள்ளன. எழுச்சி பெற்றுவரும் இஸ்லாமிய அடிப்படைவாதம் இந்த நாடுகளிலெல்லாம் ஆதிக்கம் பெறுமானால் இந்த முரண்பாடுகளையெல்லாம் களைந்து, இஸ்லாத்தின் பெயரால் அந்த நாடுகளை ஒன்றிணைக்க முயலும். அப்படி நடந்தால் பலம் வாய்ந்த இஸ்லாமிய உலகொன்று உருவாகும். அதில் பலம்வாய்ந்த இஸ்லாமிய படையொன்று உருவாகும்.

இது நடைமுறைச் சாத்தியமற்றது என்று கூறப்படும் வாதத்திற்கு அமெரிக்கா ஒருபோதும் செவிமடுக்கமாட்டாது. ஏனெனில் இது தொடர்பாக சில அனுபவங்களையும் -அச்சங்களையும் அமெரிக்கா கொண்டிருக்கின்றது.

வளைகுடாப் போரின் பின் ஈராக்கிற்கு எதிராக ஐ.நா. விதித்த எண்ணெய் ஏற்றுமதித்தடையை ஈரானின் உதவியுடன் சதாம்குசேன் உடைத்து வருகின்றார். அதாவது ஈராக்கிற்கு வெளியே அதன் எண்ணெய் போகாதவாறு பன்னாட்டுப் படைக் கப்பல்கள் வளைகுடாக்கடலுக்குள் ஒரு முற்றுகையை இட்டுள்ளன. ஆனால் ஈராக்கின் தரை எல்லை வழியாக ஈரானுக்குள் கொண்டு செல்லப்படும் எண்ணெய் அங்கிருந்து ஏற்றுமதி செய்ய ஈரான் வழிசமைத்துக் கொடுத்துள்ளது இது அமெரிக்காவை கோபத்திற்கும் அதேசமயம் ஆச்சரியத்திற்கும் ஆழ்த்தியிருக்கிறது ஏனெனில் எலியும் பூனையும் போல பகைமைச் சக்திகளாகவே இவ்விரு நாடுகளும் இருந்துவருகின்றன. சில வருடங்களுக்கு முன்னர்தான் இரு பக்கத்திற்கும் பேரழிவை ஏற்படுத்திய ஒரு யுத்தம் முடிந்தது. இன்றும்கூட இரண்டு நாடுகளினதும் போர்க்கைதிகள் இரண்டு நாடுகளிலும் உள்ளனர். அப்படியிருக்க திடீரென மேற்குலகின் தடைகளுக்கும் அழுத்தங்களுக்கும் எதிராக, இஸ்லாத்தின் பேரால் இவ்விரு நாடுகளும் ஏதோ ஒரு வகையில் கூட்டுச் சேர்ந்துள்ளன.

இதேபோன்று, அமெரிக்க பயணிகள் விமானமொன்றுக்கு குண்டு வைத்து 259 இற்கும் மேற்பட்ட பிரயாணிகளைக் கொன்றதாக சந்தேகப்படும் நபர்களை, லிபிய அரச விசாரணைக்காகத் தரவேண்டும் என்ற மேற்குலகின் அழுத்தத்தை, லிபியா தட்டிக் கழித்து வருகின்றது. இந்த விடயத்தில் லிபியாவைப் பணிய வைக்கச் செய்ய அரபு நாடுகளின் கூட்டணி முயல வேண்டும் என்ற அமெரிக்காவின் கோரிக்கையும் எந்தவிதப் பயனையும் அளிக்கவில்லை. இந்த விடயத்தில் அரபுலகின் மௌன ஆதரவு லிபியாவுக்கே கிடைத்துவருகின்றது.

அதேவேளை இன்னுமொரு புறத்தில் ஈரான், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் மற்றும் சோவியத்திலிருந்து உதிர்ந்துவிழுந்த சில இஸ்லாமிய நாடுகளையும் ஒன்றிணைத்து ஒரு இஸ்லாமியக் குடியரசொன்று அமைவதற்கான சாத்தியப்பாட்டைப் பற்றி அமெரிக்க இராஜதந்திரிகள் அச்சம் கொண்டிருக்கின்றனர்.

இவை இப்படியிருக்க, சோவியத்தின் சிதைவுடன் அதன் இராணுவ அணுவாயுத தொழில்நுட்பம் விலைக்கு வாங்கப்படக்கூடிய ஒன்றாகிவிட்டது. அதுவும் சோவியத்திலிருந்து பிரிந்த சில இஸ்லாமியக் குடியரசுகளில் இத்தகைய விஞ்ஞானிகள், தொழில்நுட்ப நிபுணர்கள் இருக்கின்றனர். அத்துடன், இக்குடியரசுகளில் இருந்து அணுவாயுதங்கள் கூட சில இஸ்லாமிய அரசுகளால் கொள்வனவு செய்யப்பட்டுவிட்டன என்றொரு சந்தேகம், மேற்குலகிடம் உண்டு. எல்லாவற்றிலும் மகுடம் வைப்பது போல உலகப் பொருளாதாரத்தை நிர்ணயிக்கும் எண்ணெய், இஸ்லாமிய உலகிடமே நிறைந்திருக்கின்றது.

எனவே, இந்த இஸ்லாமிய உலகம் தன்னை ஒரு பலம் வாய்ந்த சக்தியாக உயர்த்திக் கொள்ளும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

மறுபுறத்தில் இந்த இஸ்லாமிய உலகம் ஒன்றுபடுவதைத் தடுப்பதிலும் அமெரிக்கா பகீரத முயற்சிகளைச் செய்துவருகின்றது.

இஸ்லாமிய உலகம் அமைந்துள்ள பிராந்தியங்களிலுள்ள முஸ்லீம் விரோத அரசுகளுக்கு இராணுவ உதவிகளை வழங்கி, அவற்றைப் பலப்படுத்தி முஸ்லீம் நாடுகளுடன் மோத விட்டு அதன்மூலம் முஸ்லீம் நாடுகளின் பலம் அதிகரிக்காமல் பார்க்க முயல்கின்றது. இந்த வகையில் மத்திய ஆசியாவில் இஸ்ரேலைப் பயன்படுத்துவதுபோல, தென் ஆசியாவில் இந்தியாவை) பயன்படுத்த அமெரிக்கா முயற்சித்துக் கொண்டிருக்கின்றது. அதேவேளை பலம்பெற்றுவரும் முஸ்லீம் நாடுகளை அருகிலுள்ள முஸ்லீம் நாடுகளுடன் மோத வைத்து, அவற்றின் பலத்தைச் சிதைக்க முயல்கின்றது. அல்லது பல காரணங்களைக் கூறிக்கொண்டு அதன் மீது போர் தொடுத்து அழிக்க முயல்கின்றது. அல்லது பொருளாதாரத் தடைகளை விதித்து பலவீனமாக்குகின்றது. இவ்விதம் மேற்குலகிற்கும் இஸ்லாமிய உலகிற்கும் இடையே முறுகல் நிலை அதிகரித்து வருகின்றது. இது 'இரண்டாவது பனிப்போர்' என அழைக்கப்படும் அளவுக்கு வளர்ந்து செல்கின்றது. பொஸ்னிய முஸ்லீம்கள், சேர்பியர்களால் இனப்படுகொலை செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்த உறுதியான நடவடிக்கைகளை மேற்குலகம் எடுக்காததற்கு, இந்தப் பனிப்போர் பிரதான காரணியாக இருக்கின்றது. பொஸ்னிய விவகாரத்தில் முஸ்லீம்களுக்கு அனுதாபம் தெரிவிப்பதுபோல அமெரிக்க மற்றும் மேற்குலக ஆட்சியாளர்கள் காட்டிக் கொண்டாலும், உண்மையில் அந்த மக்களுக்கு எதிராகவே மேற்குலக அரசுகள் நடந்து வருகின்றன. இனி அடுத்தபடி

தொடர்ச்சி [illegible]ம் பக்கம் ....

# நேருக்கு நேர்









நன்றி

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# எங்கள் நினைவுகளும் இனியுள்ள தேவைகளும்

நா.யோகேந்திரநாதன்



கண்டி வீதியே அன்று கலகலத்துக்கொண்டிருந்தது.

குளிப்பாட்டி, நீறு அணிந்து, சந்தன குங்குமப் பொட்டுகளிட்டு, கொம்பு மாலை சுற்றப்பட்ட எருதுகள் இழுத்துச் செல்ல "அரோகரா" கோசங்களுடன் ஏழு வண்டில்கள் சென்று கொண்டிருக்கின்றன.

பாதையின் இருமருங்கிலும் சாவகச்சேரியில் இருந்து புளியம்பொக்கணை வரை மக்கள் கூட்டம். திவ்வியமான ஒரு உணர்வுச் சிதறல்கள் பாதை யெங்கும் பரவிக் கிடக்கின்றன.

வேளைகட்டுவோர், அர்ச்சனை செய்வோர் நேர்த்திப் பொருட்கள் காணிக்கைகள் கொடுப்போர் எனத்தெருவே திருவிழாக் கோலம் பூண்டு நிற்கின்றது.

அவலும், கடலையும், வாழைப் பழமும், சர்க்கரைத் தண்ணீரும் தேநீரும் வெறும் உபசரிப்பாயன்றி உளமகிழ்வின் வெளிப்பாடாக அள்ளி அள்ளி வழங்கப்படுகின்றன.

புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோவிலிலிருந்து உரிய பூசைகள் முடித்து சூலம், கைப்பிரம்பு, கமண்டலம் ஆகியன காவலாக வர இவ்வண்டில்கள் புறப்பட்டு, சாவகச்சேரிச் சந்தையில் மடைப்பண்டங்கள் வாங்கிக் கொண்டு திரும்பி வருகின்றன.

பங்குனி உத்தரத்திற்கு நடைபெறும் பொங்கலுக்கு மடைப்பண்டம் வாங்கப் புறப்படும் வைபவத்துடன் இப்பொங்கலுக்கான தயாரிப்புக்கள் கோவில் சம்பந்தப்பட்டவர்களிடம் மட்டுமன்றி முழு வட தமிழீழம் எங்கும் களை கட்ட ஆரம்பித்து விடும்.

பொங்கலன்றோ -

பொங்கல் செய்வோர், நேர்த்திக் கடன் நிறைவேற்றுவோர், காவடி எடுப்போர், கரகம் ஆடுவோர் என வட பகுதியின் பிரதிபிம்பமே அங்கு கோவில் சுற்றாடலை நிறைத்திருக்கும்.

இது ஒரு மத வைபவம் மட்டுமா?

இல்லை. இல்லவேயில்லை!
மரங்களின் கீழும், பரந்த வயல் வெளிகளிலும், கூடியிருந்து பாய் விரித்துக் களைத்திருந்து, குதூகலித்து, கடலை சப்பிக் கச்சான் உடைத்துப் பரிமாறி தூரத்து உறவுகளின் அந்நியோன்னியத்தைக் குடும்பங்கள் குடும்பங்களாக அனுபவிக்கும் ஆனந்தம் -

உறவினர் வீடுகளில் சில நாட்கள் தங்கி வன்னிக் காற்றின் வருடலை அனுபவிக்கும் இன்பம்

புதிய திருமணப் பேச்சுக்கால்கள் மூலம் மேலும் வன்னிக்கும் குடாநாட்டுக்குமான உறவுகளைப் பேணி வளர்த்தல் -

இப்படி, இப்படி இப்பொங்கல் எமது வாழ்வின் ஒரு பிரிக்கமுடியாத வழமையாக எமது பண்பாட்டுக் கோலத்தின் ஒரு வெளிப்பாடாக, கருவிலேயே ஊறிய உறவுகளின் சங்கமமையமாகத் திகழ்கிறது.

பாலம்பிட்டி, தட்சிணாமருதமடு ஆகிய வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க கிராமங்களின் அருகில் முதிரையும் பாலையும் வீரையும் ஓங்கி வளர்ந்த அடர்ந்த காட்டின் நடுவில் -

ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்த அந்த இடத்தில் ஒரு தனி இலையின் அசைவு கூடக் கேட்கும் அளவிற்கு அமைதி -

அந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு கம்பீரமான, தெய்வீகமான குரலின் தெட்டத் தெளிவான ஆராதனை -

அந்த ஆராதனையுடன் ஒன்றி தம்மை மறந்து லயித்திருக்கும் மக்கள் வெள்ளம் -

இது மடுமாதா திருப்பதி!

இங்கே மத வேறுபாடுகள் இல்லை, பிரதேச வேறுபாடுகள் இல்லை, சாதி வேறுபாடுகள் இல்லை.

முழு வடதமிழீழ மக்களையும் வேற்றுமைக்கு அப்பாற்பட்ட ஒரு உறவினால் பிணைத்திருக்கும் ஒரு தெய்வீகம் இங்கே திகழ்கிறது.

முருகபக்தர் முழங்காலில் நிற்கிறார்!
அம்மன் பக்தை ஆராதனையில் கலந்துகொள்கிறாள்;

பேசாக்குழந்தையை பேச வைப்பதற்கு பருத்தித்துறைப் பெருமகனொருவர் வெள்ளி நாக்கு செய்துகொடுக்கிறார்!

தீராப் பிணியைத் தீர்ப்பதற்காக தின்னவேலித் , தியாகராசன் பெற்ற பிள்ளையை விற்று வாங்குகிறார்!

மன்னார் மருசலீன் தன் எண்ணம் ஈடேற ஆளுயர மெழுகுதிரி கொழுத்தி அன்னையைத் தொழுகிறார்.

மன்னார் மாவட்டத்தில் ஏனைய வடதமிழீழ மக்களைக் கொண்டுவரும் அற்புதத் திருக்கோவில் இது. அனைவரும் ஒன்றாகக் கூடிச் சமைத்துண்பதும், கலகலப்பும் சிரிப்பும் கும்மாளமுமாய்க் காடுகளுக்குள் பாலைப்பழம் தேடிச் செல்வதும் காலம் காலமாக வழங்கிவரும் எமது ஒருமைப்பாட்டு வெளிப்பாடுகளில் இதுவும் ஒன்று!

ஒருபுறம் பரந்த நந்திக்கடல், மறுபுறம் விரிந்த மருதநில வயல் வெளிகள் -

வைகாசி விசாகத்திருநாள் -

காலம் காலமாக தமிழ் மக்கள் மத்தியில் வழங்கிவரும் கண்ணகி வழிபாட்டின் தலைச் சின்னமாக விளங்கும் வற்றாப்பளை அம்மன் கோவில் மக்கள் வெள்ளத்தால் திரண்டிருக்கிறது. எட்டுநாட்களுக்கு முன்பே நந்திக் கடலில் நீரெடுத்து முள்ளியவளை காட்டு விநாயகர் கோவிலில் விளக்கேற்றுவதுடன் ஆரம்பமாகும் இவ்விழா, விசாகத்திருநாளன்று அம்மன் பொங்கலுக்காக வன்னியையும், குடாநாட்டையும் ஒன்றாக்குகிறது. அந்த வெட்ட வெளியில், கடலோர நிலவில், பொங்கல் செய்வதும், வழிபடுவதும் உறவுகளுடன் கூடிக்களைத்து சிரித்து மகிழ்வதும் இதை வெறும் மதவழிபாட்டுக்கு அப்பால் உறவுகளைப் பேணும், சொந்தங்களை வளர்க்கும் எமது தேசியத்தை நிலைநிறுத்தும் சடங்காக ஆக்கிவிடுகின்றது. குடா நாட்டிலிருந்து இங்கு வருவோர் உறவினர் வீடுகளில் தங்குவதும், எட்டாம் மடைவரை சுற்றத்தார் வீடுகளுக்குச் சென்று கொண்டாடுவதும், திரும்பும்போது நெல், தேன், நெய், வேட்டை இறைச்சி வத்தல்கள் என அன்பளிப்புகளோடு புறப்படுவதும் எமது பாரம்பரிய பண்பாட்டு வழக்கங்கள்.

கதிர்காமத்திற்கு கால்நடையாகச் செல்லும் பக்தர்கள், கந்தரோடை அங்கணக்கடவையிலிருந்து புறப்பட்டு வற்றாப்பளை அம்மன் பொங்கலில் பங்குகொண்டு, பின்பே அங்கிருந்து புறப்படுவர். அன்றைய கதிர்காமக் கரைப்பாதை அடர்ந்த காடுகளும், ஆபத்தும் நிறைந்ததாகையால், வற்றாப்பளையில் வைத்து உறவினர்கள் பிரியாவிடை கொடுப்பதும், அழுவதும், ஏக்கம் நிறைந்த விழிகளுடன் கையசைப்பதும், வருடாந்த நிகழ்ச்சியாகும்.

கரவெட்டிப் பாணிக் காத்தவராயன் கொக்குத்தொடுவாயில் ஆடப்படுவதும், புதுக்குடியிருப்பு சிந்துநடைக்கூத்து பருத்தித்துறையில் பேணப்படுவதும் எமது கலாசாரபூர்வமான தொடர்புகளின் ஆணித்தரமான சான்றுகள். முள்ளியவளைக் கோவலன் கூத்தின் ஆட்டமரபுகள், குறிப்பாக பிரசித்தி பெற்ற பொற்கொல்லன் ஆட்டம் வட்டுக்கோட்டைக் கூத்துக்களில் காணலாம். இது மட்டுமன்றி கரையூர், பாசையூரில் காணப்படும் வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள் மன்னார் மாவட்டம் முழுவதுமே விரவிக் கிடக்கின்றன. இணுவில், வடமராட்சி, அளவெட்டி, காங்கேசன்துறை போன்ற இடங்களில் இசைநாடகக் கலைஞர்கள் வன்னிப்பகுதி முழுவதுமே சென்று நிகழ்ச்சிகளை நடத்துவதும், பிரபல கலைஞர்கள் ஆங்காங்கே தங்கள் சீடர்களைக் கொண்டிருப்பதையும் காணலாம். முருங்கன் படமாளிகை குடாநாட்டு இசை, நாடகக்கலைஞர்களின் குவிமையமாக இருந்து, கலையால் வன்னியும், குடாநாடும் உறவாடிய வரலாற்றின் சான்றாகத் திகழ்கிறது.

வன்னிக்காடுகளில் வழிந்து வரும் மழை நீரால் தன்னை நிரப்பும் இரணைமடு, அருவியாற்றில் கரைபுரளும் நீரை ஏந்தித் திகழும் கட்டுக்கரை, வளங்கொழிக்க வைக்கும் வவுனிக்குளம், இன்னும் அங்கும் இங்கும் சிதறிக்கிடக்கும் சின்னஞ்சிறு குளங்கள் வன்னியை நீரால் மெருகேற்ற, வன்னியோ நெல்லாலும், உழுந்தாலும், பயறாலும் உணவளிக்கும் களஞ்சியமாகிறது. ஆனால் குடாநாடோ ஆழக் கிணற்று நீரை உழைப்பின் உரத்தால் மேலேற்றி வெங்காயம், மிளகாய், வாழை என உபபயிர்களின் உற்பத்தித் தளமாகிறது. இளைஞர் குடியேற்றத் திட்டத்தின் தோற்றம், உப உணவு உற்பத்திக்கான கதவுகளை வன்னியிலும் திறக்க குடாநாட்டின் இளைஞர்கள், விவசாயிகள் பலர் வன்னியை நோக்கி இடம் பெயர்கின்றனர். இதனால் பெற்றோர் இங்கும், பிள்ளைகள் அங்குமாக நிலப்பரப்புகளுக்கான தூரங்கள் மனோரீதியாகவும், உறவுகளாலும் மிக மிக நெருங்கிவிட்டன. குடாநாட்டின் தங்கையின் மகள் பூப்பெய்தினால் தலைக்கு நீர்வார்க்க வன்னியில் இருந்து அண்ணன் வரும் அளவிற்கு தொடர்புகள் இறுகிவிட்டன. வன்னியில் மழை பொழிந்தால்தான் வடதமிழீழத்தின் வயிறு நிறையும் என்னும் அளவிற்கு உணவு உற்பத்தியின் கேந்திரமாகி விட்டது வன்னி.

மாடுகள்! மாடுகள்! மாடுகள்!

இவை எங்கே செல்கின்றன?

இந்த நீண்ட கண்டி வீதியில், ஆயிரக்கணக்கில், [illegible] இவை எங்கே அடைபட்டுப் போகின்றன? இடைக்காடு, கோப்பாய், வடமராட்சி ஆகிய இடங்களைச் சேர்ந்தவையல்லவா இவைகள்!

வன்னியை நோக்கிய இவற்றின் இடப்பெயர்வு இங்கே பயிர்ச்செய்கை ஆரம்பமாகும் காலத்தில் நடக்கிறது. வன்னியில் விதைப்பு ஆரம்பமாகும் வரை காரைச்சியில் பரந்த வயல்வெளிகளே இவைகளின் மேய்ச்சல் காடு. மழைகாலத்தில் திரும்பி வந்து இயக்கச்சியில் வைத்துப் பராமரிக்கப்பட்டு மீண்டும் மாரிமுடிய சொந்த இடங்களை அடையும். வன்னி இவற்றின் மேய்ச்சல்களாக இருப்பது மட்டுமன்றி, அங்கிருந்து கொண்டு வரப்படும் வைக்கோல், தவிடு ஆகியனவே தீவனத் தேவைகளையும் பூர்த்தி செய்கிறது. மனித உணவுத் தேவை மட்டுமன்றி கால்நடைகளின் தீவனத் தேவை கூட வன்னி குடாநாட்டின் உறவுகளிலேயே தங்கியுள்ளது.

இங்கே சில புதிய வாடிகள் தோன்றியிருக்கின்றனவே? பொறிகளில் வள்ளங்கள், [illegible], வலைகள், தொழிலாளர்கள் என கொண்டு வந்து இறக்கப்படுகிறதே?

சோளகம் பெயர்ந்துவிட்டது மாதகல் பொன்னாலை கடற்கரைகளில் வாடியமைத்து மீன் பிடிக்க வல்வெட்டித்துறைச் சம்மாட்டிமார் வந்துவிட்டனர். வாடைக்காற்று வீசத் தொடங்கிவிட்டாலோ மன்னார் 'சவுத்பார்' கடற்கரை கரையூர் மீனவர்களால் நிறைந்துவிடும். கடற்தொழில் பிணைப்புகள் மட்டுமன்றி மன்னார் பனங்கட்டிக் கொட்டிக்கும், கரையூருக்கும் இடையே திருமணப் பந்தங்களாலும் நெருங்கிய உறவுகள் உண்டு.

குடாநாட்டுக்கான உழவு எருதுகள், சவாரி மாடுகள் ஆகியன கொக்குத்தொடுவாய், மன்னார், [illegible] ஆகிய இடங்களில் இருந்தே பெறப்படுகின்றன. இந்த பட்டிகளின் மாடுகள் சிறந்த தொழில் புரியக்கூடியன எனவும், [illegible] கருதப்படுகிறது.

கலை பண்பாட்டு நடவடிக்கைகள், பொருளாதாரம், கல்வி உறவுகள் என குடாநாடும், வன்னியும் பிரிக்கப்பட முடியாது பிணைக்கப்பட்டு உள்ளன. இருபகுதிகளுக்கும் இடையிலான தொடர்புகள் காலம் காலமாக உருவாகி வளர்ந்தவை. ஒன்றில் இருந்து ஒன்று பிரிக்கப்படும்போது [illegible] நெருக்கமானவை. வன்னி வயல் வெளிகளில் ஓடிக் குடாக் கடலில் வடியும் நீரைப் போன்றே, குடாநாட்டின் பனங்கூடல்களைத் தாண்டி வரும் வெள்ளமும் ஆனையிறவுக் கடலிலேயே சங்கமமாகிறது.

ஆனால் இன்று -

ஆலய வழிபாடுகளாலும், திருமண உறவுகளாலும், கலை பண்பாட்டு நடவடிக்கைகளாலும், பொருளாதாரத் தொடர்புகளாலும், கல்விப் பிணைப்புக்களாலும் பேணப்பட்ட உறவுகள் கேள்விக்குறியாகிவிட்டன.

தொடர்ச்சி 8ம் பக்கம் ....

சிங்கள பௌத்த பேரினவாத அரசு 1958 இல் ஆரம்பித்த தமிழ் இன அழிப்பு நடவடிக்கை, 1983 ஆடி 23 இல் மாபெரும் இனப்படுகொலையாக மாறியது. '1983 ஆடிக் கலவரம்' என அழைக்கப்படும், சிறீலங்கா அரசின் தமிழ் மக்கள் மீதான பிரகடனப்படுத்தாத இவ்யுத்தமானது ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் உயிரைப் பறித்ததோடு, இரத்தத்தை உறையவும் வைத்தது. கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டன. 1993 ஆடி 23, 1983 ஆடிக் கலவரத்தின் பத்தாம் ஆண்டு நிறைவு நாள். 10 ஆண்டுகள் கடந்தும் இன அழிப்பு நடவடிக்கை நிறுத்தப்படவில்லை. மாறாக அது இன்று தமிழர்கள் மீது மேற்கொள்ளப்படும் பிரகடனப்படுத்திய இன அழிப்பு யுத்தமாக பரிணாம வளர்ச்சி பெற்றுள்ளது. 1983 ஆடிக்கலவரத்தினை நினைவு கூரும் முகமாகவும் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டுவரும் சிறீலங்கா அரசின் இன அழிப்பு நடவடிக்கையை, எமது மண்மீட்புத் தேவையை எடுத்துக் காட்டும் நோக்கமாகவும் இக்கட்டுரை பிரசுரிக்கப்பட்டுள்ளது.

# 1983 ஆ

# தமிழ் மக்களின் மேல்

23 ஆடி 1983, சிறீலங்கா பௌத்த சிங்களப் பேரினவாத அரசு இலங்கைத் தீவில் வாழும் தமிழ் மக்களின் மேல் பிரகடனப் படுத்தாத யுத்தத்தை ஆரம்பித்த நாள். இதனால், தலைநகரான கொழும்பு உட்பட சிங்களப் பிரதேசங்களில் வாழ்ந்த பல்லாயிரம் தமிழர்கள் இன அழிப்புக்கு (Genocide) ஆளாகினர். இது வெறும் இனக்கலவரம் அல்ல. சிங்களவரான எல். பியதாசாவின் பாஷையிலேயே இதுஒரு மனிதப் படுகொலை (Holocaust). இந்த தமிழின அழிப்புத் திருவிழா இலங்கைத் தீவில் வாழும் தமிழர்களைப் பொறுத்தவரை கப்பட்டும் அகதிகளாக இடம் பெயர்ந்தனர். பின்வரும் 4 நிலைகளில் தமிழர்களின் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டு எரியூட்டப்பட்டன.

1. வெள்ளவத்தை, தெகிவளை, பம்பலப்பிட்டி, கிருலப்பனை போன்ற கொழும்பு வட்டாரங்களில் உள்ள வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டு எரிக்கப்பட்டன.

2. பம்பலப்பிட்டி, பொரல்ல, கொட்டாஞ்சேனை போன்ற ரீதியாக பிரசித்தி பெற்ற தமிழர் வியாபாரப் பகுதிகளில் உள்ள மளிகைக்கடைகள், சேலைக்கடைகள் எரிக்கப்பட்டன. தமிழரில் உள்ள பெரிய வர்த்தகர்களை இலக்காகக் கொண்டு இது நிகழ்ந்தது.

4. இந்திய வெளிநாட்டு வங்கி, இந்திய வம்சாவளியில் வந்த இலங்கைக் குடிமக்களின் வங்கிகள், வியாபார நிறுவனங்கள், தொழில் முயற்சிகள் என்பவற்றை அழிப்பதுடன் இலங்கையில் உள்ள இந்தியப் பிரசைகளையும் தாக்குதல்.

இத்தகைய விபரங்கள் முன்கூட்டியே சேகரிக்கப்பட்டு, சேகரிக்கப்பட்ட பட்டியலை மையமாகக் கொண்டே தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

இந்த அடிப்படையில் தாக்குதல்கள் நடாத்தப்பட்டதை அவதானிப்பவர்கள் இந்த 'மனிதப் படுகொலை' திட்டமிடப்பட்ட [illegible] அல்லது இனவெறித் தன்மையாலோ மட்டும் நடைபெற்ற ஒரு உணர்ச்சிச் செயற்பாடல்ல இது. உணர்வு பூர்வமாகச் சிந்தித்து தமிழர்கள் மேல் நடாத்தப்பட்ட இவ் அரசியல் தாக்குதல், சிறீலங்கா அரசின் பிரகடனப்படுத்தப்படாத யுத்தம் என்பதை நன்கு வெளிப்படுத்தியுள்ளது. இம் மனிதப்படுகொலைகளுக்கு சிகரம் வைத்தாற்போல் வெலிக்கடைச் சிறையில் அரசியற்கைதிகளாக இருந்த 53 தமிழர்களின் படுகொலைச் சம்பவம் அமைந்தது. இதனால் இச்சம்பவம் நடந்த தினம் எனக்கூறப்படும் ஆடி 25 சர்வதேச சமூகத்திற்கு நீதி, பாதுகாப்பு என்பவற்றை சவாலிடும் நாளாகத்தான் நிகழ்கிறது. இந்த சிறைப் படுகொலை நடந்து பத்து ஆண்டுகள் ஆகின்றன. ஆயினும் இன்றுவரை இந்த மனித வதை பற்றிய எந்த ஒரு நீதி விசாரணையையும் சரியான முறையில் சிறீலங்கா அரசு நடாத்தவில்லை. இதனை இன்றுவரை சர்வதேச சமூகமும் வாய் மூடி மௌனமாக பார்த்துக்கொண்டிருக்கிறது. கைதிகளாக அல்லது விசாரணைக் கைதிகளாக இருந்தவர்கள் அனைவரும் 'அரசியல் கைதிகள்' என்ற தலைப்பில் அடங்குபவர்களே. [illegible] கொல்லப்பட்டனர். [illegible] தமிழீழத்தைக் காண்பதற்காக [illegible] குட்டிமணி [illegible] கண்கள் தோண்டப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு அந்த கோரப்படுகொலையில் ஈடுபட்ட சிங்களவர்கள், நிராயுதபாணிகளான தமிழ் அரசியல் கைதிகள் 53 பேரையும் மனித வதை செய்தே படுகொலை செய்தனர்.



1983 ஆடிக்கலவரத்தின்போது சிங்கள இனவெறியர்களினால், பிறந்த மேனியாக்கப்பட்டு அவமானப்படுத்தப் பட்ட நிலையில் ஒரு அப்பாவித் தமிழ் மகன்

தமிழின அழிப்பின் வெள்ளி விழா. 1958 இல் கலவரம் மூலம் ஆரம்பமான சிங்கள பௌத்த பேரினவாதத்தின் தமிழ் இன அழிப்பு நடவடிக்கை 1983 இல் தனது வெள்ளி விழாவை மனிதப் படுகொலையாக நடாத்தி முடித்தது. ஆவணி 5ம் திகதி வரை இவ் வினப்படுகொலை தொடர்ந்து கொண்டே இருந்தது. கம்பகா, களுத்துறை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, திருகோணமலை போன்ற இடங்களில் மனிதப் படுகொலையின் தொடர் நிகழ்வுகளால் தமிழர் உயிர்களும் உடமைகளும் பெருமளவில் அழிக்கப்பட்டன. ஆறு இலட்சம் இலங்கைத் தமிழர்களும் பல இலட்சம் மலையகத் தமிழர்களும் இம்மனிதப் படுகொலை நிகழ்வுகளால் வீடுகள் எரிக்கப்பட்டும் உடைக்கடைகள், தேநீர் உணவுக்கடைகள், புறக்கோட்டையில் இருந்த உணவு சேலை மொத்த விற்பனைக்கடைகள் என்பன இலக்காகக் கருதப்பட்டன. பின்னர் [illegible], நுகேகொட போன்ற புதிய வியாபாரப் பிரதேசங்களும் இதனுள் அடக்கப்பட்டு தமிழர் கடைகள் மட்டுமே எரிக்கப்பட்டன.

3. சேலை ஆலைகள், ஆடை தயாரிப்பு தொழிற்சாலைகள், இறப்பர் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள், இரத்மலானை, ஜா-எல, பேலியகொடவிலுள்ள தேங்காய் எண்ணெய் வடிக்கும் நிலையங்கள் போன்றவையை இலக்காகக் கொண்டு தமிழர் முதலீட்டைக் கொண்ட அல்லது தமிழர் முகாமைத்துவத்தைக் கொண்ட நிலையங்கள்

☆ ஸ்ரீலங்கா அரசில் தமிழர்கள்

☆ தமிழ் மக்களை ஆளும் த

☆ மண்மீட்பு யுத்தத்தின் தேவ
தமிழ் மக்களின் ஆயுதப்போ

☆ ஆண்டுதோறும் ஆடி 23ஐ
"இன அழிப்பு" நினைவு நா
தேவையை உலகுக்கு உண

☆ அழுத நாள்தான். ஆனால்
எழும் நாள். தமிழீழத்தை எ
கடமை அழைக்கிறது. எ

சர்வதேச சட்டப்படி, யுத்த நிலவரத்தில் கூட கைதியாக இருக்கும் ஒருவருக்கு பாதுகாப்பளிக்க வேண்டியது அரசின் கடமை. ஆனால் சிறீலங்கா அரசோ 'பயங்கரவாத தடைச் சட்டம்' என தான் இயற்றிய தான்தோன்றித்தனமான சட்டத்தால் தமிழ் மக்களை விசாரணை இன்றித் தடுத்துவைத்து, அவர்களைத் தனது கைக்கூலிகளை ஏவிவிட்டு படுகொலை செய்வித்தது. உண்மையில் சிறீலங்கா அரசு இப்படுகொலைக்கான பொறுப்பை ஏற்று மன்னிப்புக்கோரி பதவியிலிருந்து விலக வேண்டும். ஆனால், அது தனது ஏவல் ஆட்களின் செயலைக் கண்டு புன்னகைத்தது. [illegible] இன அழிப்பு உணர்வால் உயிரிழந்தவர்கள் குறித்து என்று நீதியான விசாரணை நடைபெறுகின்றதோ அன்றுதான் நீதி, உலகில் உண்டென தமிழர்கள் நம்புவார்கள். இந்தப் படுகொலைகளைக் கண்டித்து [illegible] [illegible] அதனுடன் தமது கடமை முடிந்தது என மௌனமாகிவிட்டனர். அன்று குரல் எழுப்பிய பத்திரிகையாளர்கள், மனித உரிமை அமைப்புக்கள், சமாதான அமைப்புக்கள் எல்லாம் பின்னர் ஏனோ மௌனமாகிவிட்டனர். எனவே இம்மனிதப் படுகொலைகளை உலகிற்கு மீண்டும் மீண்டும் எடுத்துக்கூறி நீதி கேட்க வேண்டியது சர்வதேசத் தமிழர்களின் வரலாற்றுக் கடமையாகிறது.



தமிழ் மக்கள்
கந்தை காட்டும்

# டி 23 இல்

இல் கரையோர மூர்கள் (முஸ்லீம்கள்), கொச்சின்காரர் மற்றும் வெளிநாட்டவருடன் பழக வேண்டாமென வற்புறுத்துகிறார். 1910 ல் அநாகரீக தர்மபாலாவே "மகாபோதி சஞ்சிகை" (Mahabodhi Journal) இல் பம்பாய் வியாபாரிகள், வீடு வீடாய்ச் சென்று பொருள் விற்கும் தென்னிந்தியர்கள் ஆகியோர் இலங்கைத்தீவில் வர்த்தகம் செய்ய, இலங்கை மண்ணின் புதல்வர்களான சிங்களவர்கள் வேலை

சில் தலைவர்களாக இருந்து இயங்கியபோதிலும், சிங்கள பௌத்தத்தின் இனவெறிப் போக்கு 1921 இலேயே இலங்கைத் தமிழ்த் தேசியத்தை வெளியே தள்ளியது. ஆயினும் சிங்கள பௌத்த பேரினவாதம் காலனித்துவ பிரிட்டனில் இருந்து விடுதலை பெறும் தேவை இருந்ததினால் இலங்கைத் தமிழ்த் தேசியத்துடன் கருத்துருவ மோதலிலேயே நின்றுகொண்டது. அத்துடன் இலங்

அமைப்பின் 29 (2)வது உப பிரிவின்படி இலங்கை சிறுபான்மை இனத்திற்கெதிரான சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால், அதுகுறித்து பிரித்தானிய மகாராணியிடம் முறையிடலாம் என்னும் காப்புவிதியை அரசியல் அமைப்புடன் சேர்த்துக் கொண்டது. ஆனால் இந்த அரசியல் அமைப்பில் மாற்றம் செய்வதானால் இலங்கைப் பாராளுமன்றத்தில் 2/3 பங்கு பெரும்பான்மை தேவை என்ப

# ிரகடனப்படுத்தாத யுத்தம்

ன் பாதுகாப்பு இன்மை நிரூபணம்

தியை ஸ்ரீலங்கா இழந்தது

வ நிரூபிக்கப்பட்டு,இதனால்
ராட்டம் சட்டரீதியானது

ழ் மக்களின்,
கவும் விடுதலைக்கான
தும் நாளாகவும் வெளிப்படுத்துகின்றனர்.

ன்றும் அழும் நாள் அல்ல,
வைக்கும் நாள்.
வோம். அணிதிரள்வீர் !

யின்றி அடிமைகளாக இருப்பதாகக் குற்றம் சாட்டுகிறார். 1912 ல் அநாகரீக தர்மபாலா "சிங்கள பதுகாய" (Sinhala Bauddhaya) என்ற சஞ்சிகையில், "வெளிநாட்டவர் இந்த மண்ணில் கால் வைத்த காலம் முதல் சிங்களவர்களின் பழக்க வழக்கங்கள், முறைமைகள், கைத்தொழில்கள் மறைந்துவிட்டன. இப்பொழுது சிங்களவர்கள் இலங்கை முஸ்லீம்களினதும் தமிழர்களினதும் கால்களில் மண்டியிட்டுக் கிடக்கின்றனர்" என எழுதுகிறார். தினமின (Dinamina) சிங்கள நாளிதழ் "முஸ்லீம்கள் எங்களை ஆக்கிரமித்துள்ள எதிரிகள்" என இதே ஆண்டு (1915) எழுதியது. மற்றொரு சிங்கள பத்திரிகை 'லக்மின' (Lakmina) "ஏற்ற ஒரு திட்டமொன்று தீட்டப்பட்டு இந்த ஏமாற்றுக்காரர்கள் கூட்டம்

கைத் தமிழரும், தென்னிந்தியத் தமிழரும் இன, மொழி, கலாச்சார தொடர்புகளுடன் இருந்தமையால், இலங்கைத் தமிழ்த் தேசியத்தின் எழுச்சி, இந்திய விடுதலைப் போராட்டத்தை ஊக்குவிக்கும் என்ற அச்சம் காரணமாக பிரித்தானியக் காலனித்துவவாதிகள் சிங்களத் தேசியத்தின் கீழ் தமிழ்த் தேசியம் கட்டுப்படக்கூடிய முறையில் அரசியல் அமைப்பு சீர்திருத்தங்களைச் செய்து, இரு தேசியத்தவர் -இரு நாட்டினர் என்ற தன்மை முனைப்புறாது தடுத்து வந்தனர். இதனால், இலங்கையில் தமிழர்களின் சட்டவாக்க சபை பிரதிநிதித்துவ விகிதாசாரம் குறைவடைந்துவந்தது. இதனை எதிர்த்து அன்றைய தமிழ் மேல்மட்டத் தலைவர்கள் ஜனநாயக பாதையில் தெரிவித்த

தம் அரசியல் அமைப்பால் வலியுறுத்தப்பட்டுள்ளது. உண்மையில் இந்த 2/3 பங்கு பெரும்பான்மையை எவ்விதத்திலாவது உருவாக்கி, தமிழர்களின் பங்கு இல்லாத தனிச்சிங்கள பௌத்த பேரினவாதச் சிறீலங்காவை உருவாக்க வேண்டும் என்பதே சிங்களப் பேரினவாதிகளது இலக்காக இருந்தது. இது சுதந்திரம் வழங்கப்பட்ட 1948 முதல் சிங்கள பௌத்த சிறீலங்கா குடியரசு சிருட்டிக்கப்பட்ட 1972 ஆம் ஆண்டு வரைக்கான சிங்கள அரசியல் கட்சிகள் அனைத்தினதும் கூட்டு பொதுவான அரசியல் போக்காகக் காணப்பட்டது. இதன் அடிப்படையிலேயே,

1. சிங்களப் பகுதிகளில் வாழ்ந்த தமிழர்களை [illegible] நோக்கி விரட்டுவது



1983 ஆடிக்கலவரத்தில் கொழும்பில் அழிக்கப்பட்ட தமிழர் சொத்தில் ஒரு பகுதி

## இனக்கொலையின் பரிணாம வளர்ச்சி

இலங்கைத் தீவில் இனக்கொலை என்பது
1. கருத்து உருவத்திலும்
2. செயல் உருவத்திலும் பரிணாம வளர்ச்சி பெறுமாறு சிங்களப் பௌத்த பேரினவாத அரசால் திட்டமிட்டு வளர்க்கப்பட்டது.

## முஸ்லீம்களுக்கு எதிரான தாக்குதல்

1880 அளவில் ஏற்பட்ட பௌத்த புனருத்தாரணத்துடன் 'பௌத்த பேரினவாதம்' ஆரம்பமாகியது. மிக்கேட்டுவத்தை குணானந்த தேரோ பௌத்தபுனருத்தாரணத்தை ஆரம்பிக்க, கேர்ணல் ஒல்கொட் 'தியோசபிக்கல்' அமைப்புக்கூடாக அதற்கு திருவள வடிவம் கொடுத்தார். 1880 இல் பௌத்த பாடசாலை முதன் முதலாக நிறுவப்பட்டது. 1904 -1912 க்கிடைப்பட்ட காலகட்டத்தில் பௌத்த பாடசாலைகள் பெருகின. அநாகரீக தர்மபாலவின் தலைமையில் பௌத்த மேலாண்மை சிங்கள மக்களிடை தூவப்பட்டது. இக்காலகட்டத்தில் பேரினவாதிகளின் தாக்குதல் முஸ்லீம்கள் மேலேயே முதலில் ஆரம்பமானது.

"சிங்கள ஜாதிய" என்ற பத்திரிகையில் அதனுடைய ஆசிரியரான பியதாசா சிறிசேனா எனும் சிங்கள நாவலாசிரியர், 1909



ான சிங்கள மேலாதிக்
வெளியீடுகளில் ஒன்று

நாட்டை விட்டு வெளியேற்றப்பட வேண்டும்" என எழுதியது. முஸ்லீம்கள் தேசிய இனமாக இல்லாது குடியேற்ற சிறுபான்மையினராக இருந்ததினால் அவர்கள் மேல் முதலில் பௌத்த சிங்கள பேரினவாதம் கைவைத்தது. இதன் விளைவாக 1915 இல் சிங்கள முஸ்லீம் இனக்கலவரம் வெடித்தது.

இதனை அடுத்து, 1916 ல் 'இலங்கை சீர்திருத்தவாதிகள் அமைப்பு' (The Ceylon Reform League) சிங்கள -தமிழ் மேல்மட்ட உறுப்பினர்களால் உருவாக்கப்பட்டு, காலனித்துவத்திலிருந்து விடுதலை பெறும் நோக்கு நோக்கி அரசியல் திசை திருப்பப்பட்டது. இதுவே 1919 ல் 'இலங்கையின் தேசிய காங்கிரஸ்'(Ceylon National Congress) ஆக மாறியது. ஆரம்பத்தில் சேர். பொன்னம்பலம் இராமநாதன் போன்ற சில தமிழர்கள் காங்கிர

எதிர்ப்புக்கள், ஆலோசனைகள் எல்லாம் சிங்கள சார்பு பிரித்தானிய ஆட்சியாளர் இடையே அதிக தாக்கத்தை ஏற்படுத்த வில்லை. மாறாக பௌத்த சிங்கள பேரினவாதிகள் தமிழர்களுடைய எதிர்ப்புக்களின் நியாயப்பாட்டினைத் திரித்து பிரச்சாரம் செய்து சிங்கள மக்களிடம் சிங்கள தமிழ் வேற்றுமை உணர்வை வளர்த்து வந்தனர்.

இந்த சூழ்நிலையில் பிரித்தானிய [illegible] பிரசுரிக்கப்பட்ட "சுதந்திர இலங்கையின் சோல்பரி அரசியல் சாசனம்" தமிழர்களின் இறைமையின் மேல் மேலாதிக்கத்தை சிங்களவரைப் பெரும்பான்மையினராகக் கொண்ட இலங்கைப் பாராளுமன்றத்திடம் வழங்கியது. ஆயினும் இன அழிப்புக்கான சாத்தியக்கூறு இருந்ததை மறவாத பிரித்தானியர், சோல்பரி அரசியல்

2. வடக்கு கிழக்கில் சிங்களக் குடியேற்றத்தின் மூலம் தமிழர்களின் சனத்தொகை [illegible] ஆகியவற்றைச் சிதைப்பது

3. இத்தகைய அடக்குமுறைகள் செயற்படுத்தப்படுகையில் தமிழர்கள் எதிர்க்காதவாறு ஆயுதப்படைகளைக் கொண்டு இராணுவ ஒடுக்குமுறை செய்வது

4. தமிழர்களை வேலைவாய்ப்பு, கல்வி, [illegible] போன்ற வாழ்க்கைக்குத் தேவையான துறைகளில் புறக்கணித்து செயலற்றவர்களாக்குவது

என்ற நான்கு முனைத் திட்டங்களை அனைத்து சிங்கள அரசியல் கட்சிகளும் தமது தாரக மந்திரமாகக் கொண்டன.

தொடர்ச்சி 10ம் பக்கம் .....

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சிறு கதை

# எப்போது விடியும்

சுந்தர்
தமிழீழம்





பஸ் பள்ளத்தில் விழுந்து, விழுந்து மெதுவாக வந்துகொண்டிருந்தது. பின்புற ஆசனத்தில் அமர்ந்திருந்த செல்வத்தின், பல நாட்களாக சீப்பைக் காணாத தலைமயிர், காற்றை எதிர்த்து நிற்க முடியாமல் காற்றோடு ஒத்து நின்றது. அவனது சேட்டும் சாரமும் தமது சொந்த நிறத்தை மறந்து இருந்தன. சிந்தனை அவனை வீட்டுக்கு அழைத்துச் சென்றது. இப்ப வந்து எத்தனை நாளாச்சு. வரக்க ஒரு கொத்து அளவிலதான் அரிசி இருந்தது. இப்ப சாப்பாட்டுக்கு என்ன செய்கினமோ? தம்பி ஒழுங்கா பள்ளிக்கூடம் போறானோ? வரும்போது தங்கை, "அண்ணா பள்ளிக்கூடம் துவங்கி இப்ப மூன்று கிழமை ஆகுது. இன்னும் கொப்பி ஒண்டும் வாங்கயில்லை." என்றாள். "இந்தா உதில முப்பது ரூபா இருக்கு, தம்பியிட்டைக் கொடுத்து கொப்பிய வாங்கு" என்று பணத்தைக் கொடுத்தான். "இப்ப கொப்பி விக்கிற விலைக்கு உதுல எத்தன கொப்பி வாங்கிறது. எப்படியும் எட்டுக்கொப்பியாவது தேவை. அப்படியெண்டால் நூற்றைம்பது ரூபாயாவது வேணும்" என்றாள். "இப்ப இரண்டு கொப்பிய வாங்கியெடு. நான் வவுனியாவால வரக்க மிச்சத்தை வாங்கி வாரன்" என்று சொல்லிவிட்டு புறப்பட்டவன். சிந்தனையில் இருந்து மீண்டவன் திடீரென குனிந்து பேக்கைத் தடவிப் பார்த்துவிட்டு திருப்தியோடு நிமிர்கின்றான்.

"அண்ண இண்டைக்கு போட் ஓடுமாமோ" அருகில் இருந்தவரிடம் செல்வம் விசாரிக்கின்றான். "இண்டைக்கு ஓடும் எண்டு கதைக்கினம். ஆனால் உந்த நேவிக்காரர் இடையில நிண்டு என்ன செய்கிறானுகளோ. அப்படி எண்டால் என்னண்டு தம்பி போட் ஓடும்". அவர் தனது அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். இதைக் கேட்டுக்கொண்டு அருகில் நின்றவர் "நேற்றைக்கும் போன போட்டுக்களை மறிச்சு வெட்டினவனுகளாம். இரண்டு போட்டும் எரிஞ்சுகொண்டிருந்ததாம். அதோட காலையில மூன்று பொடி கரை ஒதுங்கினதாம் என்று கிளிநொச்சியில கதைக்கினம்" என்றார். முன் ஆசனத்தில் இருந்து தொடர்ந்து இருமிக்கொண்டிருந்த முதியவர் ஒருவாறு இருமலை அடக்கிக்கொண்டு "ஓமோம் இந்தக் கூத்து எத்தனை நாளாய் நடக்குது. உவங்கள் மனிசர விட்டவங்களோ, இல்லாட்டி மருந்தத்தான் விட்டவங்களோ. நானும் இந்த மாரடைப்பால அவதிப்பட்டு அங்கை ஓடி இங்கை ஓடிப்பாத்தன். சுகப்படுத்த மருந்து இருக்க வேணுமே. கடைசியில் தான் கொழும்புக்கு வெளிக்கிட்டனான். இல்லாட்டி நாங்கள் ஏன் இந்த தள்ளாடுகிற வயதில தண்ணியில தத்தளிக்கவேணும்" என்றவரை இருமல் கதைக்கவிடாமல் தடுத்தது.

"நிற்கின்றவர்கள் எல்லாம் பின்னுக்குப் போங்கோ" என்று பஸ் நடத்துனர் கால்வைத்து நிற்கமுடியாத அந்தப் பஸ்சில் இன்னும் பயணிகளை ஏற்றிக்கொண்டிருந்தார். "இனி வாகனத்தை உடைச்சுக் கொண்டுதான் பின்னுக்குப் போகவேணும். நாங்கள் என்ன மனுசரா, இல்லாட்டி பனங்கிழங்கா? இப்படி அடுக்கிறான்." என்று ஒரு முதியவர் புறுபுறுத்தார். "எல்லோரும் இந்தப் பஸ்சிலதானே போகவேண்டும். முதல்போல இப்ப பஸ் ஓடுதா ஐயா" என்று அவரை, செல்வம் சமாதானப்படுத்தினான்.

பஸ் ஒவ்வொரு பள்ளத்திலும் விழுந்து எழும்பும்போது இடுப்பிலே குழந்தையுடன் நின்ற ஓர் இளம் பெண் நிற்கமுடியாமல் தடுமாறினாள். வாகனத்தின் மண்ணெண்ணெய் புகைக்கும், சன நெருக்கத்திற்கும் ஈடுகொடுக்க முடியாத அக்குழந்தையின் அழுகுரல் வாகனத்தின் இரைச்சலை முந்திக்கொண்டு நின்றது. அப்பெண் மீது பரிதாபப்பட்ட செல்வம் எழுந்து நின்று கொண்டு இருக்க இடம் கொடுத்தான். நன்றி கலந்த பார்வையுடன் அப்பெண் அமர்ந்து கொண்டாள். செல்வம் நின்ற இடத்திற்கு பக்கத்தில் இருந்த ஒரு சிறுவன் தாயிடம், "அம்மா பசிக்குது" என்று அடம்பிடித்தான். பேக்கைப் பார்த்த தாய் மூன்று பிஸ்கட்டுக்களை எடுத்து அவனிடம் கொடுத்தாள். அதைச் சாப்பிட்டு முடித்தவன் மீண்டும் அதே பல்லவியைப் பாடினான். "இப்ப பிஸ்கட் இல்லை. ஆலங்கேணியில் போய் இறங்கியதும் வாங்கித் தாறன்." என்று சமாதானப்படுத்தினாள். அதைக் கேட்டுக்கொண்டு வந்த செல்வம், 'இவர்கள் அங்க போய் என்ன வாங்கப் போகிறார்கள். அப்படி வாங்கிறதெண்டாலும் ஒன்றுக்கு நான்கு மடங்கு விலை விக்கும். இவர்கள் இப்பதான் முதல் தடவயாய் வருகினம் போல' என்று தனக்குள் நினைத்துக் கொண்டான்.

குஞ்சுப் பரந்தனைத் தாண்டி, பஸ் செல்லும்போது ஒரு உழவு இயந்திரத்தைச் சுற்றி இருபது பேர் வரையில் நின்றார்கள். என்ன விசயம் என்று விசாரித்தபோது, "அது காலையில ஒதுங்கின மூன்று பொடி கொண்டு போகினம்". அதில் நின்றவர் எல்லோருக்கும் கேட்கும்படி சொல்லுகிறார். ஒரு ஆணின் சடலம் வயிறு பிளந்து கத்தியால் வெட்டியது என்று பறைசாற்றிக் கொண்டிருந்தது. ஒரு பெண்ணின் சடலத்தின் கழுத்துப் பகுதி சிதைந்திருந்தது. காதிலோ, கழுத்திலோ எதுவித நகையும் இல்லாதது வெறியர்களின் குண இயல்பை வெளிப்படுத்தியது. ஒரு சிறுமியின் முகம் மதிக்கமுடியாமல் சிதைந்திருந்தது. இதைப்பார்த்த ஓர் ஆச்சி, "ஐயோ கடவுளே இதற்கு முடிவே இல்லையா? நல்லூர்க்கந்தா நீதான் எல்லோரையும் காப்பாத்த வேண்டும்" என்று வேண்டிக் கொண்டாள்.

அலங்கேணியில் போய் இறங்கியதும் எல்லோரும் மரநிழல்களைத் தேடிச் சென்றனர். மர நிழலிலும் நடுவெய்யிலிலுமாக சனவெள்ளமாக இருந்தது. இன்று போட் ஓடும் என்று கேள்விப்பட்டு இன்னும் பல பேர் வந்து சேர்ந்தனர். வெயில் உடலை வாட்டிக் கொண்டிருந்தது. செல்வம் அங்கு நின்ற ஒருவரிடம் "இண்டைக்கு எத்தனை மணிக்கு போட் வெளிக்கிடும்" என்று கேட்டான். "ஏழு மணிக்குப் பிறகுதான் வெளிக்கிடும். அதுக்கு முதல் போனால் கெலி பொம்மர் அடிக்கும் என்பதால இருட்டினாப் பிறகு போறவங்கள்" என்றார். எல்லோரும் பெயர் பதியும் இடத்தில் செல்வமும் பெயரைப் பதிந்து கொண்டான்.

மாலை ஆறு மணியளவில் எல்லோரும் கடற்கரையை அடைந்தனர். போட்டில ஏறும்படி கூறியதும் நான் முந்தி நீ முந்தி என்று ஒருவரை ஒருவர் தள்ளிக் கொண்டு ஏறினார்கள். "எண மோனே என்னை ஒருக்கா தூக்கி விடடா" என்று இரண்டு அடி ஆழமுள்ள சேற்றில் புதைந்த ஆச்சி, செல்வத்தின் கையைப் பிடித்துக் கொண்டாள். "அம்மா சேறு சேறு என்னைத் தூக்குங்கோ..." என்று ஒரு சிறுமி அலறினாள். இப்படி அமளிதுமளிப் பட்டுக்கொண்டிருக்கும்போது பூநகரி இராணுவ முகாம் கடல் பகுதியில் துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டது. அப்போது, "நேவிக்காரனுக்கும் எங்கட பெடியளுக்கும் கடலில சண்டை நடக்குதாம். அதனால இன்றைக்கு போட் போகாது. இனிப் போறதைப் பற்றி பிறகு அறிவிக்கிறோம்" என்று படகு சேவைப் பொறுப்பாளர் அறிவித்தார்.

படகு செல்லாததினால் நனைந்தபடியும், சேற்றோடும் தமது பழைய இருப்பிடங்களை சென்றடைந்தனர். "அம்மா குளிருது உடுப்பை மாற்றி விடுங்கோ" என்று ஒரு சிறுவன் கேட்க "உடுப்பு பேக்கும் நனைஞ்சு போட்டுது. காலையில காயவைச்சு போடுவம்" என்று அவனைத் தேற்றினாள் தாய். அதைப் புரிந்து கொண்டவன் மணல் தரையில் சுருண்டு கொண்டான்.

ஒரு மரத்தின் கீழ் செல்வமும் சென்று அமர்ந்து கொண்டான். செல்வத்தின் சொந்த ஊர் அளவெட்டி. செல்வத்தின் தந்தை இந்திய இராணுவம் எமது மண்ணை ஆக்கிரமித்த வேளை தேசவிரோதிகளால் கொல்லப்பட்டார். செல்வத்திற்கு ஒரு தங்கையும், தம்பியும் இருக்கிறார்கள். செல்வம் சிறு வயதிலேயே படிப்பை நிறுத்திவிட்டு தந்தையுடன் தோட்டத்திலே நின்றவன். ஆனால் தங்கையையும் தம்பியையும் ஒழுங்காகப் படிப்பித்தான். தந்தை இறந்தபின் வீட்டுப் பொறுப்பு அனைத்தும் செல்வத்தின் தலையிலே ஏறியது. அவனது கடும் உழைப்பினால் 'தந்தை இல்லை' என்ற குறை அவர்களை பெரியளவில் பாதிக்கவில்லை. இந்திய இராணுவம் சென்றபின் சிறீலங்கா இராணுவத்தின் பொருளாதாரத் தடையாலும், அளவெட்டி முற்றுகையாலும் தனது சொந்த ஊரை விட்டு வந்து, மானிப்பாயில் தெரிந்தவர் ஒருவரது வளவில் ஒரு குடிசையை அமைத்துக் கொண்டு இருந்தான். வேலை தேடித்திரிந்து ஒரு வேலையும் கிடைக்காததனால் இருந்த நகையை விற்று வவுனியா சென்று சாமான் ஏற்றி வந்து விற்று வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தான். பாதைகள் முற்றுகை காரணமாக இந்தக் கிளாலிப் பாதையால்தான் பல சிரமங்களுக்கு மத்தியிலும் தனது தொழிலைச் செய்கிறான்.

மாசிப் பனியோடு சேர்ந்து உடல் நனைந்திருந்ததால் செல்வத்திற்கு நடுக்கம் எடுத்தது. தங்கைக்கு வாங்கிய கொப்பி நனைந்துவிட்டதா என்று எடுத்தவன் "நல்லவேளை சொப்பிங் பேக்கில் இருந்ததால் நனையவில்லை" என்று முணுமுணுத்தான். இன்னும் கொஞ்சம் இறுக்கிக் கட்டிக் கொண்டிருக்கும் போது "அட செல்வமே நீ எப்படி வந்தனி" என்று கேட்டுக்கொண்டு பக்கத்து வீட்டு கனகு அருகில் வந்து இருந்துகொண்டான். "இப்ப நான் வந்து ஒரு மாதமாப் போகுது. நாளும் போவம் போவம் என்று வெளிக்கிடுறன் எப்படிப் போறது" என்று அலுத்துக் கொண்டான். "அப்ப உனக்கு உந்த விசயம் தெரியாதே. உன்ர தம்பியல்லே இரண்டு கிழமைக்கு முதல் இயக்கத்துக்கு எண்டு போட்டான்." இதைக் கேட்டதும் செல்வத்துக்கு வேறு ஒரு கதையும் விளங்கவில்லை. "இப்ப அம்மாவும், தங்கச்சியும் என்ன செய்யினமோ" என்று பதறினான். எப்படியாவது நாளைக்காவது வெளிக்கிடுவது என்று முடிவெடுத்தான்.

அங்கேயிருந்து இங்கேயுமாகத் திரிந்து ஒருவாறு தன்னுடைய நிலைமையைச் சொல்லி சாமான் கொண்டு போகும் போட்டில் போவதற்கு அனுமதி பெற்றுக்கொண்டான். இரவு ஏழு மணிபோல் ஐந்து போட்டுக்கள் ஒன்றன் பின் ஒன்றாக வெளிக்கிட்டன. அதில் ஒன்றில் செல்வமும் ஏறிக்கொண்டான். "ஏதும் பிரச்சினை என்றால் எல்லோரும் பாய்ந்து நீந்தித்தான் வரவேண்டும். அந்த மாதாதான் எங்களைக் காப்பாற்ற வேண்டும்" என்று வேண்டிக்கொண்டு படகோட்டி படகைச் செலுத்தினார். தூரத்தில் இடையிடையே துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது. போட் நடுக்கடலில் சென்றதும் "அங்கே பாருங்கள் ஏதோ கறுப்பா நாலு உருவம் தெரியுது. அது நேவியாகத்தான் இருக்க வேணும் எல்லோரும் குதியுங்கள்" என்று கத்திவிட்டு படகோட்டி எல்லோரும் குதித்து நீந்தத் தொடங்கினார்கள். சிறுவயதிலிருந்து தோட்டத்தில் நின்ற செல்வத்திற்கு எங்கே நீந்தத் தெரியும்? துப்பாக்கி ரவைகள் [illegible] வந்து படகுகளை சல்லடை போட்டன. செல்வம் தங்கைக்கு வாங்கி வந்த கொப்பிப் பார்சல், வெறுமையாக ஆடி ஆடி நீரிலே தாண்டு கொண்டிருந்தது. ■

## சூரிய விருட்சம்

இருட்டு எம்மை
ஏப்பமிட்டதால் - இன்று
இருட்டே நடுங்குகிறது
ஏனென்றால்.
இருட்டு வயிற்றுக்குள்
முளைத்த ஒரு பொறி
சூரிய விருட்சமாய்
சுடர்விடத்
தொடங்கியதால்!!

- த. மறவன்

# ஐரோப்பிய சமூக நாடுகளும் வெளிநாட்டு அகதிகள் நிலையும்

( 2 )

மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு கல்வி, வேலைவாய்ப்பு நிமித்தமாகவும் அகதிகளாகவும் குடியேற்றக்காரர்களாகவும் இடம்பெயர்ந்து வாழ்கின்ற வெளிநாட்டவர்களை ஐரோப்பிய சமூகத்தின் ஒன்றிணைவு (European Community) எந்த வகையில் பாதிக்கின்றது என்பதையும், ஐரோப்பிய நாடுகளில் பரவிவரும் வெளிநாட்டவர்களுக்கு எதிரான இனத்துவேசத்தின் தன்மை பற்றியும் இக்கட்டுரை ஆராய்கின்றது. இக்கட்டுரையின் இரண்டாவது பகுதி இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

ஜேர்மனியைப் பொறுத்தவரை 1990 ஐயும் பார்க்க 1991 இல் தீவிர வலதுசாரிகளின் தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்பட்டன. 1991 இல் உள்துறை அமைச்சு காரியாலயத்தின் ஐப்பசி மாதக் கணக்கெடுப்பில் 271 வன்முறைச் செயல்களும் 134 தாக்குதல் சம்பவங்களும் வெளிநாட்டவர்களுக்கு எதிராக நடைபெற்றுள்ளனவென்று கணிக்கப்பட்டுள்ளது. இதில் ஈடுபட்டவர்களில் 70%மானவர்கள் 20 வயதை அண்டியவர்களாகவும் அதற்கு உட்பட்ட இளைஞர்களாகவும்தான் இருக்கிறார்கள் என்பது தெரியவந்துள்ளது. ஜேர்மனியில் வெளிநாட்டவர்களுக்கு எதிரான வலதுசாரி அரசியல் கட்சிகள், குழுக்களின் வளர்ச்சி அதிகரித்துக் கொண்டு வருவதுடன், அவர்களுக்கும் தீவிர வலதுசாரிகளுக்கும் பொதுமக்களின் அனுதாபமும் ஆதரவும் அதிகரித்து வருவதாக இடதுசாரிகள் கருதுகிறார்கள். 1991ல் டெயஸ் பீகல் (Der Spiegel) சஞ்சிகை எடுத்த ஒரு கணிப்பீட்டின்படி 34% மக்கள் வலதுசாரிப் போக்காளர்களுக்காக அனுதாபம் கொண்டுள்ளனர் என்பது அறியவந்துள்ளது.

1992 இல் ஜேர்மனியில் நிலைமை மோசமாகக் காணப்படுகிறது. இதுவரை 360 க்கும் மேற்பட்ட வன்செயல்களும் 175க்கும் மேற்பட்ட தாக்குதல் சம்பவங்களும் இடம்பெற்றதாக செய்திகள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. ஆனால் தற்பொழுது நடைபெறுகின்ற, நடைபெற்ற வன்செயல்கள் தீவிரமடைந்து பெரிதாகக் காணப்படுகின்றன. இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்ததுபோல, கிழக்கு ஜேர்மனியின் 'றோஸ்றொக்' (Rostock) சம்பவம் விளங்குகிறது. இது உலகின் கவனத்தையே கவர்ந்துள்ளது. இதைத் தொடர்ந்து ஜேர்மனியில் வன்செயல்கள், தாக்குதல் சம்பவங்கள் நடந்துகொண்டே வருகின்றன. 'சக்சன் கவுசன்' (Sachsen Hausen) என்ற இடத்தில் யூதர்களின் ஞாபகார்த்த இடம் நாசிகளால் எரித்து நாசமாக்கப்பட்டமை ஒரு பெரிய சம்பவமாக இருக்கிறது. ஜேர்மனியில் வாழும் அகதிகள், வெளிநாட்டவர்கள் அச்சத்துடன் வாழ வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

பிரான்சிலும் வெளிநாட்டவர்களுக்கெதிரான சூழ்நிலை வளர்ந்துகொண்டே போகிறது. தீவிர வலதுசாரிகளின் நடவடிக்கைகள், வன்முறைகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

பிரான்சில் பொதுவாக வெளிநாட்டு வேலையாட்களும், குடியேறியுள்ள மூன்றாவது உலக நாட்டவர்களின் பிள்ளைகளும், அகதிகளாக உள்ளவர்களும் தாக்கப்படும் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இது எதிர்காலத்தில் அதிகரித்துவரலாமென்ற அச்சம் பிரான்சிலுள்ள இடதுசாரிக்கட்சிகளுக்கிடையேயும், மக்களுக்கிடையேயும் காணப்படுகிறது. பிரான்சின் பிரதம மந்திரி காரியாலயம் 1990 இல் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் வெளிநாட்டவர்களுக்கெதிரான தாக்குதல் சம்பவங்களில் சுமார் 80%மானவை வட ஆபிரிக்கர்களுக்கு எதிராக காணப்படுகிறதெனக் கூறப்பட்டுள்ளது. 1990 மே மாதம் 9ம் திகதி 'காப்பென்றாஸ்' (Carpentras) மாகாணத்தில் இருக்கும் யூதர்களின் சவக்காலையில் 37 புதைகுழிகள் தோண்டப்பட்டும், சிதைக்கப்பட்டும் அந்தக் காலப்பகுதியில் இறந்த 80 வயது மதிக்கத்தக்க யூதர் ஒருவரின் பிணம் வெளியே எடுக்கப்பட்டு சின்னாபின்னப்படுத்தி மாசுபடுத்திய சம்பவம் நடந்தது. இதனை அரசியல் எதிர்க்கட்சிகள், இடதுசாரிகள், மனித உரிமை ஸ்தாபனங்கள், முக்கிய பிரபல்யமான மக்கள் பாரிஸ் நகரில் மௌன ஊர்வலம் செய்து எதிர்த்துள்ளனர். 1990 யூலை மாதம் பிரான்சிய நாடாளுமன்றத்தில் இனவாத நடவடிக்கைகளுக்கு எதிராக சட்டம் கொண்டுவரப்பட்டது. இதனைத் தொடர்ந்து அரசாங்கம் சட்டவிரோத குடிவரவு, குடியேற்றம் இவைகளைக் கட்டுப்படுத்த -தடுக்க திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்த முற்பட்டது. பிரான்சிய அரசு இனவாதத்தை எதிர்த்ததுடன் குடிவரவு, குடியேற்றச் சட்டங்களையும் கடுமையாக்கியது.

பிரான்சில் ஜென் மேரி லே பென்ஸ் (Jean Marie le pens)இன் தேசிய முன்னணியின் குடிவரவாளர்கள், வெளிநாட்டவர்களுக்கு எதிரான இனவாத அரசியல் கொள்கைகளுக்கு ஆதரவு கூடிக்கொண்டே வருகிறது. 1991 ஐப்பசி மாதம் லே மொண்டே (Le Monde)யில் 32% வாக்குகளைப் பெற்றுள்ளது. அத்துடன் பாரம்பரிய வலதுசாரிக் கட்சிகளின் ஆதரவு பிரான்சில் அதிகரித்துக்கொண்டே வருகிறது. மேலும் பழைய பிரான்சின் தலைவர் வலறி கிஸ்காட் டீ எஸ்ராய்ங் (Valery Giscard De Estaing) குடிவரவு ஒரு ஊடுருவல். அது தொடரக்கூடியது ஒன்று என வர்ணித்துள்ளார்.

பிரதம மந்திரியாக இருந்த எடித்கிறேசன் (Edith Cresson) சட்டவிரோத குடிவரவாளர்களின் பெரியளவிலான ஊடுருவலுக்கெதிராக போராட வேண்டுமென்று கூறியுள்ளார். வெளிநாட்டுக் குடியேற்றக்காரர்களும் பிரான்சிலே பிறந்துவளர்ந்த அவர்களது பிள்ளைகளும் அகதிகளாகப் போனவர்களும் வேலை வாய்ப்புக்கள், உயர் கல்வி, உயர்தர சமூக வேறுபாடு காரணமாக தாழ்த்தப்பட்டும், பாதிக்கப்பட்டும் வருவது கூடிக் கொண்டிருக்கிறது. 1991 யூன் மாதத்தில் பாரிஸ் மன்ரன் லா யொலி (Manten la Jolie) பகுதியில் வெளிநாட்டவர்களுக்கெதிரான இளைஞர்களுக்கும் பொலிசாருக்குமிடையே குழப்பமும் கைகலப்பும் நடைபெற்றது. இவைகளைப் பார்க்கும்போது பிரான்சிலும் வெளிநாட்டவர்களது எதிர்காலம் பாதிக்கப்படக் கூடியதொன்றாகவே உள்ளதென்பது தெரிகிறது.

ஆஸ்திரியாவில் வெளிநாட்டவர்களுக்கெதிரான இனத்துவேசமும், புதிய நாசிகளின் செயற்பாடும் உருவாகியுள்ளது. 1990 இல் ஆஸ்திரியாவில் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் புதிய நாசிகளின் சந்திப்பு நடைபெற்றதாக அறியப்படுகிறது. இந்தச் சந்திப்பின் பின்னர் புதிய நாசிகளின் செயற்பாடு மேற்கு ஐரோப்பிய நாடுகளில் அதிகரித்துக் காணப்படுகிறது. ஆஸ்திரியாவில் உள்ள தீவிர வலதுசாரிகள் குடிவரவாளர்களுக்கெதிரான சுதந்திரக் கட்சி (Anti immigrant Freedom paty) ஒன்றை உருவாக்கி தேர்தலில் பங்கு கொண்டு வருகிறார்கள். இவர்கள் 1991 கார்த்திகை மாதம் ஆஸ்திரிய தலைநகர் வியன்னாவில் நடைபெற்ற தேர்தலில் "வியன்னா, வியன்னா மக்களுக்கே" என்ற சுலோகத்தைப் பிரயோகித்துள்ளார்கள். ஆஸ்திரியாவில் புதிய நாசிகளும், மொட்டைத் தலையர்கள் குழுக்

**சோமா**

களும் தீவிரமாக, வெளிநாட்டவர்களுக்கு எதிராக இயங்கி வருகிறார்கள். இவர்கள் ஜேர்மன் புதிய நாசிகள், மொட்டைத் தலையர்கள் போன்ற குழுக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளார்களெனவும் அறியக்கூடியதாக இருக்கின்றது.

பிரித்தானியாவிலும் இனஎதிர்ப்பு வளர்ந்து கொண்டுதான் வருகிறது. மெத்றோ பொலிரன் (Metro Politen) பொலிஸ் அதிகாரிகளின் 1990 ம் ஆண்டறிக்கையில் பிரித்தானியாவில் இனஎதிர்ப்புச் சம்பவங்கள் 22% அதிகரித்துள்ளன வென்றும் இனரீதியாக உருவாக்கப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் 25% அதிகரித்துள்ளன வென்றும் கூறப்பட்டுள்ளது. உள்நாட்டு அமைச்சின் காரியாலயப் புள்ளிவிபரப்படி, வெள்ளை கறுப்பு இன (கறுப்பு இனமென்று கூறும்போது வெளிநாட்டு மக்களும் அடங்குவார்கள்) மக்கள் ஒன்றுக்கு இரண்டு என்ற வீதத்தில் விளக்கமறியலில் இருக்கிறார்கள் என்றும், இனவாத தாக்குதல் சம்பவங்களால் மக்கள் சிறைச்சாலைக்கு வருவது கூடிக்கொண்டே வருகிறதென்றும் ஒரு விளக்கம் முடிந்தால் இரண்டு சம்பவங்கள் வருகிறதென்றும், அறியக்கூடியதாக இருக்கின்றது.

கைத்தொழில் சேவை சஞ்சிகையின் (Industrial Service Journal) அபிவிருத்தியும் ஆட்சேர்ப்பும் என்ற அறிக்கையின்படி, பிரித்தானியாவில் படித்து பட்டம் பெற்ற சிறுபான்மை இனமக்களும், அடிப்படையில் வேறுபட்ட வேற்று நாட்டு மக்களும் தொழில் தொழில் வாய்ப்புக்களைப் பெறுவதில் பெரிதும் புறக்கணிக்கப்படுகிறார்கள். கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். வெள்ளை இன மக்களுடன் ஒப்பிடும்போது இது ஒரு இனரீதியான புறக்கணிப்பென்பது மிகத் தெளிவாகின்றது.

இனசமத்துவ ஆணைக்குழுவினர் (Commission for Racial Equvality -CRE) தொழிற்சாலைகளிலோ, நிறுவனங்களிலோ, தனியார் ஸ்தாபனங்களிலோ இனவேறுபாடு காட்டாது, தனித்துவமாக நின்று, பொதுவாகத் தகுதி அடிப்படையில் வேலை வாய்ப்புக்களைக் கொடுக்க வேண்டுமென்று கூறியுள்ளனர். அரச கல்வி விஞ்ஞானப்பகுதிச் செயலாளர் ஜோன் மக்கிறேகர் (John Macgregar) என்பவர் 1988 ஆம் ஆண்டு கல்விச் சட்டப்படி பெற்றோர்கள், பிள்ளைகளின் பாடசாலையைத் தெரிவுசெய்ய உரிமையுடையவர்கள் எனக்கூறியுள்ளார். இது 1976 ஆம் ஆண்டின் இனத்தொடர்பு (Racial Relationship) சட்டத்தோடு முரண்படுவதுடன், அதனை மீறுவதாக உள்ளதெனவும், இத்தீர்மானமானது ஒரு கணிசமான இனப்பிரச்சினைக்குரிய சூழ்நிலையை உருவாக்குவதற்கு காரணமாக அமைவதுடன், பாடசாலைகளுக்கிடையிலான இன வேற்றுமையை வளர்க்குமெனவும் இனசமத்துவ ஆணைக்குழு (CRE) கண்டித்தது. இதனைத் தொடர்ந்து பிரித்தானியாவில் இனரீதியான பிரச்சினைகள் தலைதூக்கின. வெளிநாட்டவர்கள் அதிகமாக வருகிறார்கள் என்ற எண்ணம் மக்களிடையே கூடிக்கொண்டு வருகிறது.

சுவிற்சலாந்தில் வெளிநாட்டவர்களுக்கெதிரான சூழ்நிலை தற்போது வளர்ந்துகொண்டுவருவதாக காணப்படுகிறது. காரணம், அங்கு அதிகளவிலான அகதிகள் செல்வதுதான். அது ஒரு உல்லாசப்பயணத்திற்குரிய ஒரு நாடாக இருப்பதால் வேலை வாய்ப்பு அதிகம். இதன் காரணம், அகதிகள் செல்லும் தொகையும் அதிகரித்தது. 12 மாத காலத்திற்குள் 43,000 க்கு மேற்பட்ட அகதிகள் சென்றுள்ளனர். இது மிகமிக அதிகமெனக்கூறுகிறார்கள். பொதுவாக அகதிகள் வருகை அதிகரித்துக் கொண்டே செல்வதால், வெளிநாட்டவர் தங்கள் நாட்டுக்கு வந்து தங்கள் பொருளாதாரத்தைச் சுரண்டிக் கொண்டு போகின்றார்களென வலதுசாரித் தீவிரவாதிகள் கூறிவருகிறார்கள். இதனால் மக்களிடையே வெளிநாட்டவர்களுக்கெதிரான வெறுப்புணர்ச்சி தலைதூக்கிக் கொண்டு வருகிறது. வெளிநாட்டவர்களைத் தாக்கும் சம்பவங்கள் பல நடந்திருக்கின்றன. தற்போதும் ஆங்காங்கு நடைபெறுவதாக அறியமுடிகிறது. சிலர் கொலை செய்யப்பட்டுமுள்ளார்கள்.

இத்தாலியிலும் கூட வெளிநாட்டவர்களுக்கெதிரான வெறுப்புணர்ச்சி காணப்படுகிறது. வட இத்தாலிக்கும், தென் இத்தாலிக்கும் இடையே வாழுகின்ற மக்களிடத்தில் வேறுபாடு காணப்படுகிறது. தென் இத்தாலியைப் பொறுத்தவரை நீண்டகாலமாக சரித்திர காலம் தொட்டு அதிகளவு வெளிநாட்டுத் தொடர்புகளைக் கொண்டிருந்த காரணத்தால், அப்பகுதி மக்கள் ஓரளவு வெளிநாட்டு மக்களைப் புரிந்து நடக்கும் தன்மையுடையவர்கள் எனலாம். வட இத்தாலியைப் பொறுத்தளவில் இதற்கு மாறுபட்ட தன்மை காணப்படுகிறது.

இத்தாலியிலுள்ள மூன்று பெரும் கட்சிகளான கிறிஸ்டியன் ஜனநாயகக் கட்சி, பழைய கம்யூனிஸ்ட் கட்சி, சோசலிஸ்ட் கட்சி ஆகியன மூன்றும், தற்போது இத்தாலியில் இருக்கும் தீவிர வலதுசாரி பாசிசக் கொள்கைகளைக் கொண்ட குழுக்களான லொம்பாட் லீக்கு (Lombard League), வெனெரோ (Veneto), பீட்மொன்ற் லீக்கு (Piedmont League) என்பனவற்றின் தற்போதைய நிலை, வளர்ச்சி பற்றி மிகக் கவனமெடுத்து கணிப்பீடு செய்து வருகின்றன. காரணம், இந்த வலதுசாரிக்குழுக்களும் வெளிநாட்டவர்களுக்கெதிரான கொள்கையைக் கொண்டுள்ளன. இந்த வலதுசாரிக்குழுக்கள் வட இத்தாலியில் பெரும் செல்வாக்குப் பெறும் சூழ்நிலை உருவாகிக் கொண்டு வருகின்றது. இவர்கள் வட இத்தாலியில் அதிகமான வெளிநாட்டவர்கள் குடியேறியும், களவாகவும், அகதிகளாகவும் வாழ்கிறார்கள் என்றும், இவர்களால் எங்களுக்கு எதிர்காலத்தில் பெரும் ஆபத்து ஏற்படுமெனவும் பொதுமக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். ஏறக்குறைய 3,00,000 சட்டவிரோதக் குடிவரவாளர்கள் இத்தாலி முழுதும் இருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர் கிழக்கு ஐரோப்பா, ஆபிரிக்கா, ஆசிய நாடுகளில் இருந்து வந்துள்ளனர் என்றும் வலதுசாரிகள் கூறிவருகிறார்கள்.

புதிய பாசிச லொம்பார்ட் குழு 1991 ஆம் ஆண்டு மே மாதம் வலென்சாபோ (Valenzapo) நகரில் நடைபெற்ற தேர்தலில் 23% வாக்குகளைப் பெற்றுள்ளது. தீவிர வலதுசாரிகள் எல்லாம் சேர்ந்து 1992 பொதுத் தேர்தலில் 30% வாக்குகளைப் பெற்றுள்ளனர். இது இடதுசாரிக்கு பெரும் அச்சத்தினையும், பயத்தினையும் ஏற்படுத்தியுள்ளது. இவைகளைப் பார்க்கும்போது இத்தாலியில் இனத்துவேசம், புதிய நாசிசம் வளர்ந்து கொண்டுவருகிறதெனத் தெரிகிறது.

தற்பொழுது மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு மூன்றாம் உலக நாடுகளில் இருந்தும், கிழக்கு ஐரோப்பாவில் இருந்தும் பெருமளவில் அகதிகள் வந்து குவிகிறார்கள். இவர்கள் தங்கள் நாடுகளில் இருந்து அரசியல் பிரச்சினை, இனப்பிரச்சினை, உள்நாட்டுப் போர், மனித உரிமை மீறல்கள், மதப்பிரச்சினை, உணவுப் பிரச்சினை, உயிருக்குப் பாதுகாப்பற்ற நிலை என்பன போன்ற காரணங்களால் வெளியேறுகிறார்கள். இவர்கள் பெரும்பாலும் மேற்கு நாடுகளில், கைத்தொழில் நாடுகளில் தஞ்சம் கோருகிறார்கள். பொதுவாகப் பலரும் அரசியல் காரணங்களைக் காட்டி தங்களை அரசியல் அகதிகளாக விண்ணப்பம் செய்கிறார்கள். இப்படியாக வருபவர்களின் தொகை ஆண்டுதோறும் அதிகரித்து வருவதாக மேற்கு நாடுகள் மிகவும் அச்சம் கொண்டுள்ளன. அரசியல் தஞ்சம் கோருபவர்களின் தொகை அதிகரிப்பதாலும் அகதிகளாக வருபவர்களின் தொகை பெருமளவில் கூடிக்கொண்டு வருவதாலும் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வெளிநாட்டவர் தொகை மிகவும் அதிகரித்து வருவதாகக் கருதப்படுகிறது.

தொடர்ச்சி 15ம் பக்கம் ....

# இரண்டாவது பனிப்போர்

## அமெரிக்கா தலைமையிலான மேற்குலகத்திற்கும் இஸ்லாமிய உலகத்திற்கும் இடையில் ?

"தொட்டிலில் கிடக்கும் ஒரு முஸ்லீம் குழந்தை சிணுங்கும் போதும் மேற்குலக நாடுகளின் அழிவைப் பற்றித்தான் அது பேசுகின்றது"

*'பற்றிக்புசான்' - ஜனநாயகக் கட்சியின் அபேட்சகராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக முன்னாள் ஜனாதிபதி புஸ் உடன் போட்டியிட்டவர்.*

"அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகளின் நலன்களுக்கு எதிரான உண்மையான எதிரி இஸ்லாமிய அடிப்படைவாதிகள் தான். இவர்களின் அதிகார எழுச்சிகள் - அது எங்கு நடந்தாலும் எப்பொழுது நடந்தாலும் -அமெரிக்காவுக்கும் அதன் நேசநாடுகளுக்கும் தீங்கையே இழைத்து வருகின்றன."

*'டானியல் பைப்ஸ்' - அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கை ஆய்வுப் பிரிவின் இயக்குனர்.*

"இஸ்லாமிய தீவிரவாதத்தை ஐரோப்பாக் கண்டத்தினுள் கொண்டு செல்லும் ஒரு வாகனத்தைப் போலவே, பொஸ்னியாவை மத்திய கிழக்கிலுள்ள இஸ்லாமியத் தலைமை கருதுகின்றது."

*அமெரிக்க நாடாளுமன்ற குடியரசுக் கட்சியினரின் ஆய்வுக் கழகம் வெளியிட்ட (செப் -1992) ஒரு அறிக்கை.*

"செவ்விந்திய மக்களைப் போல பிரான்சு நாட்டு மக்களும் அழிந்துபடுவதை [இஸ்லாமிய ஆக்கிரமிப்பால்] நான் விரும்பவில்லை."

*'ஜீன்மாறிலீபென்' - பிரான்ஸ் நாட்டின் தீவிர வலதுசாரித் தலைவர்.*

சோவியத் சாம்ராச்சியத்தின் சிதைவுக்குப் பின்னர், அமெரிக்கா தலைமையிலான மேற்குலகின் முதலாவது எதிரியாக இஸ்லாமிய அடிப்படைவாதம் மேலெழுந்துவிட்டது. இதை மேற்குறித்த வாக்கியங்களும், அதைக்கூறியவர்களின் அரசியல் அந்தஸ்துக்களும் வெளிப்படையாகக் காட்டுகின்றன.

இஸ்லாமிய மக்கள் 'சியா', 'சுனி' என இரண்டு பிரிவுகளாக விளங்குகின்றனர். கடவுள் ஒன்றுதான் -அல்லா -என்று கூறுகின்றது இஸ்லாம். 'அல்லாகு அக்பர்' (அல்லாவே பெரியவன்; எல்லாமே அல்லாதான்) என்பது அவர்களது சக்திமிக்க ஒரு பொதுக் கோசம்.



கொம்யூனிச பூதத்தின் சாவுக்குப் பின்னர் இஸ்லாமிய அடிப்படைவாதம் என்ற பிசாசு தங்களை விழுங்க வருவதாக, மேற்குலகம் கருதுகின்றது.

- இந்த இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கு மேற்குலகம் ஏன் அஞ்சி நடுங்குகின்றது?

**எழுச்சிபெற்றுவரும் இஸ்லாமிய அடிப்படைவாதம், இஸ்லாத்தின் பெயரால் முஸ்லீம் நாடுகளையெல்லாம் ஒன்றிணைக்கும்போது, பலம் வாய்ந்த இஸ்லாமிய உலகொன்று உருவாகலாம்; அதில் பலம்வாய்ந்த இஸ்லாமியப் படை ஒன்றும் உருவாகலாம்.**

- இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் நோக்கம் என்ன?
- மேற்குலக படைபலத்திற்கும் ஆற்றலுக்கும் சவால்விடக் கூடியளவிற்கு இஸ்லாமிய உலகம் பலம் வாய்ந்ததா?

இக்கேள்விகளுக்குரிய விடைகளிற்கு வழிகாட்டுவதுதான் இக் கட்டுரையின் நோக்கம்.

சுமார் 550 கோடி மக்களைக் கொண்ட உலக சனத்தொகையில் -மத அடிப்படையில் -100 கோடி மக்கள் முஸ்லீம்களாவர்.

ஐ.நா.சபையால் அங்கீகரிக்கப்பட்ட மொத்தம் 172 நாடுகளில் 26 நாடுகள் முஸ்லீம் நாடுகளாகும். இந்த நாடுகளில் மிகப் பெரும்பாலானவை ஒரு தொடரான நிலப்பரப்பில் அமைந்துள்ளன. ஆபிரிக்கக் கண்டத்தின் கிழக்குப் பகுதியில் இருந்து மத்தியகிழக்கு ஊடாக பாகிஸ்தான் வரை, ஒரு பெரும் நிலப்பரப்பில் இந்த இஸ்லாமிய உலகம் விரிந்து -பரந்து கிடக்கின்றது.

காலத்திற்குக் காலம் அல்லா தனது நபிகளை (தூதர்கள்) பூவுலகிற்கு அனுப்பி மக்களை இரட்சிக்கின்றார் என்கிறது இஸ்லாம். அவ்விதம் மூன்று நபிகள் பூமிக்கு அனுப்பப்பட்டதாக அது கூறுகிறது. முதலில் மூசா நபியும், பின்னர் ஈசா நபியும், இறுதியாக முகமது நபியும் அனுப்பப்பட்டதாக இஸ்லாம் கூறுகிறது. இதில் மூசா நபி என்பது யூதர்களின் தெய்வமான மோசசையும், ஈசா நபி என்பது இயேசுகிறிஸ்து நாதரையும் குறிப்பிடுகின்றது. இறுதித் தூதுவரான முகமது நபியே அல்லாவால் அருளப்பட்ட 'புனித குர்ஆனை' பூமிக்கு இறக்கியவர் (எழுதியவர் அல்ல) என, இஸ்லாம் கூறுகின்றது.

சியா முஸ்லீம் பிரிவினர் இப்புனித குர்ஆனை அப்படியே பின்பற்றுபவர்களாக -தீவிர பழமைபேணிகளாக -இருக்கின்றனர். இவர்களிடம் சக்திமிக்க ஒரு மதத்தலைமை உண்டு. இறுக்கமான கட்டுப்பாடுகள், சட்டதிட்டங்கள் உண்டு. இவர்களுடைய மதத்தலைவர் 'இமாம்' என அழைக்கப்படுவார்.

சுனி முஸ்லீம்கள் சிறிய சிறிய சீர்திருத்தங்களுடன் புனித குர்ஆனை பின்பற்றுகின்றனர். இவர்களிடம் ஒரு பொது மதத்தலைவர் இல்லை. மதக்கட்டுப்பாடுகளும் சியா பிரிவினரைப் போல மிகக் கடுமையாக இல்லை.

உலக இஸ்லாமிய சனத்தொகையில் 'சுனி' முஸ்லீம்கள் 89 வீதத்தினராகவும், 'சியா' முஸ்லீம்கள் 10 வீதத்தினராகவும் இருக்கின்றனர். ஈரானில் மட்டும்தான் சியா முஸ்லீம்கள் மிகப் பெரும்பான்மையாக வாழுகின்றனர்.

ஆனாலும் மேற்குலகம் தற்போது மிரட்சியுடன் நோக்கும் இஸ்லாமிய அடிப்படை வாதத்தின் எழுச்சி, உலக முஸ்லீம்களில் சிறுபான்மையினரின் நாடாகிய ஈரானிலிருந்தே எழுந்து விரிந்து வருகின்றது.

**கொம்யூனிசப் பூதத்தின் சாவுக்குப்பின்னர் இஸ்லாமிய அடிப்படைவாதம் என்ற பிசாசு தம்மை விழுங்கவருவதாக, மேற்குலகம் அஞ்சுகின்றது**

இஸ்லாத்தினதும் இஸ்லாமியர்களினதும் புனிதத்தை மீட்டெடுப்பதும், பாதுகாப்பதும்தான் இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் பிரதான இலக்கு என, அவர்கள் சொல்கின்றார்கள்.

நீண்ட நெடுங்காலமாக மேற்குலகின் கலாசார பழக்க வழக்கங்கள், மற்றும் மேற்குலக சித்தாந்த கருத்து ஆதிக்கங்கள் இஸ்லாமிய உலகிலே புகுந்துள்ளதால் இஸ்லாமிய சமூகம் மாசடைந்துவருவதாக, இஸ்லாமிய அடிப்படைவாதிகள் குற்றம் சுமத்துகின்றனர். இதைத்தடுத்து நிறுத்தி இஸ்லாத்தின் புனிதத்தையும், இஸ்லாமியர்களின் தனித்துவத்தையும் பேணுவதற்காக புனித குர்ஆன் சொல்லும் வழிமுறையில் இஸ்லாமியர்கள் ஒழுகவேண்டுமெனவும், இவர்கள் வலியுறுத்துகின்றனர். இதை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்காக இஸ்லாமிய நாடுகளின் ஆட்சி அதிகாரங்களை இஸ்லாமிய அடிப்படைவாதிகள் கைப்பற்ற வேண்டுமென, அவர்கள் ஆலோசனை கூறுகின்றனர்.



இப்புனித முயற்சிக்கெதிரே எது தடையாக இருக்கின்றதோ -அது இஸ்லாமிய நாட்டிற்குள் இருந்தாலும் சரிதான் வெளி உலகில் இருந்தாலும் சரிதான் -அதற்கெதிராக புனிதப் போரை (ஜிகாத்) தொடுத்து, இறுதி வெற்றிவரை போர் செய்ய வேண்டுமென, இஸ்லாமிய தீவிரவாதிகள் பிரகடனம் செய்கின்றனர்.

முன்னர் ஈரான், அமெரிக்க சார்பு பொம்மை ஆட்சியாளர்களால் ஆளப்பட்டபோது, மேற்குலக கலாசாரங்களான இரவு நடன விடுதிகள், மதுபான நிலையங்கள், விபச்சார விடுதிகள், மற்றும் பாலியல் களியாட்டங்கள் என்பன அங்கே மலிந்திருந்தன. இதனால் இஸ்லாமிய கலாசாரம் மாசுபட்டதுடன் ஈரானிய தேசத்தை அப்போதைய ஆட்சியாளர்கள் அமெரிக்காவுக்கு தாரை வார்த்துக் கொடுத்துவிட்டார்கள் என்றும் குற்றம் சாட்டிக் கொண்டு, ஈரானிய மதத்தலைவரான இமாம் கொமேனியின் கீழ் ஈரானிய மக்கள் அணிதிரண்டனர். ஈரானில் ஒரு யுகப் புரட்சி நடந்து முடிந்தது. மிகவும் கட்டுப்பாடான மதவிதிகளைக் கடைப்பிடிக்கும் மதத்தலைவரான இமாம் கொமேனி ஆட்சித் தலைவரானார். இஸ்லாமிய மரபுவாதம் ஆட்சி விதியாக மாறியது. அத்துடன் இந்த இஸ்லாமியப் புரட்சி மற்றைய முஸ்லீம் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. அங்கெல்லாம் அது ஊழிக் காற்றாகச் சுழன்றடித்தபடி உள்ளது.



இஸ்லாமிய நாடுகள் மத்தியில் எழுச்சி கொண்டுவரும் இந்த இஸ்லாமிய தீவிரவாதம் அபாயம் நிறைந்தது என மேற்குலகம் கருதுவதற்கு ஏராளமான காரணங்களுண்டு.

இந்த இஸ்லாமிய அடிப்படைவாதம் முன்னர் கூறியதைப் போல, அதன் கருவிலேயே மேற்குலக எதிர்ப்பைக் கொண்டுள்ளது. அரசியல் புரட்சியாக மாறிவரும் இந்த இஸ்லாமிய தீவிரவாதத்தின் எழுச்சி, மேலும் மேலும் பரவலானால், முஸ்லீம் நாடுகளின் ஆட்சிப்பீடம் காலகதியில் இஸ்லாமிய தீவிரவாதிகளின் கைகளுக்கே சென்றடையலாம் என, மேற்குலகம் அஞ்சுகிறது. அப்படி நிகழ்ந்தால் அது அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகளுக்கு ஒரு பாரிய அச்சுறுத்தலாக அமையும் என்பது பொதுவான கருத்து.

ஏனெனில், மேற்குலகப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருப்பது எண்ணெய். இது பரந்த இஸ்லாமிய உலகத்திலேயே பெருமளவு கிடைக்கின்றது. இந்த எண்ணெய் மேற்குலகத்திற்கு எதிரான ஒரு ஆயுதமாக மாற்றப்படும் அளவுக்கு முஸ்லீம் நாடுகள் ஒன்றுபடுமேயானால், அது மேற்குலகின் வீழ்ச்சிக்குத்தான் கட்டியம் கூறும்.

அத்துடன் இஸ்லாமிய நாடுகள் இராணுவ ரீதியாக ஒரு குடையின் கீழ் அணிதிரளக்கூடிய அளவுக்கு சில அடிப்படைகளையும் கொண்டிருக்கின்றன.

தொடர்ச்சி ௯ம் பக்கம் ...

# கிளாலி கடற்பரப்பில் மக்களின் பாதுகாப்புப் பணியில் மூன்று புலிகள் வீரச்சாவு

கிளாலி கடற்பரப்பில் பயணிகள் மீது தாக்குதல் மேற்கொள்ள முற்பட்ட சிறீலங்கா கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் மூன்று போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,
கடந்த மாதம் கிளாலிக் கடற்பரப்பில் பயணிகளுக்கு பாதுகாப்பு வழங்கும் பணியில் ஈடுபட்டிருந்த கடற்புலிகளுக்கும், பயணிகள் மீது தாக்குதல் மேற்கொள்ள முற்பட்ட கடற்படையினருக்கும் இடையிலேயே இம்மோதல் இடம்பெற்றது. இறுதியில் கடற்புலிகளின் உக்கிரமான தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத கடற்படையினர் பலத்த இழப்புக்களுடன் பின்வாங்கிச் சென்றனர். இம்மோதலில் வீரச்சாவடைந்த மூன்று கடற்புலிகள்; * கடற்புலி கப்டன் சாஜகான் (ஊர்த்து சேவியர் சீலன், மணற்காடு, குடத்தனை), * கடற்புலி லெப். மணியரசன் (சங்கணன் - பொன்னம்பலம் ரவீந்திரன், சப்பர்மடம், பருத்தித்துறை), * கடற்புலி லெப். சேகர் (காளிமுத்து மனோகரன், கிளிநொச்சி) ஆகியோராவர். இவர்களின் புகழுடல்கள் பருத்தித்துறை பழைய பஸ் நிலையத்திலும் பின்னர் நெல்லியடி பஸ் நிலையத்திலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபின் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு அணிவகுப்பு மரியாதையுடன் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் புதைகுழியில் விதைக்கப்பட்டது. ■

# இராணுவம் என்று அஞ்சி கிராமசேவகர் அலறினார்

"நாங்கள் 'இது எங்கள் தேசம்' படத்தின் ஒரு காட்சியை படமாக்கிக் கொண்டிருந்தோம். அக்காட்சி, வீதியால் வருவோர் போவோரை இந்திய இராணுவத்தினர் துன்புறுத்தும் காட்சி. இப்பாதையில் குறுக்குவழியால் வந்த ஒரு கிராமசேவகர், திடீரென்று இராணுவ உடையில் நிற்பவர்களைக் கண்டதும் இந்திய இராணுவம்தான் திரும்பவும் வந்துவிட்டதென நினைத்து தன்னை ஒன்றும் செய்ய வேண்டாம் என்று குழறினார்."

இவ்வாறு இப் படத்தை எடுக்கும்போது நடந்த சம்பவங்கள் பற்றி முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் சங்கர் தெரிவித்தார். ■

# தென் தமிழீழ மக்களின் 'தலைநகர்' சஞ்சிகை

தென் தமிழீழ இடம்பெயர்ந்த மக்களால், 'தலைநகர்' எனும் கையெழுத்துச் சஞ்சிகை ஒன்று கடந்த மாதம் வெளியிடப்பட்டுள்ளது.

தும்பளையில் அமைக்கப்பட்டுள்ள பூபதி -மனோரஞ்சன் தயான் குடியிருப்பு மக்களால் வெளியிடப்பட்ட இக்கையெழுத்துச் சஞ்சிகையின் வெளியீட்டு விழாவில், சமூக-பொருளாதார வளர்ச்சித் திட்டப் பொறுப்பாளர் ரவி, திரு. பிரிதுகாந், மற்றும் வடமராட்சி மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி தமிழரசி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இச்சஞ்சிகையில் மாவீரர் வணக்கத்துடன் இம்மக்கள் இடம்பெயர்ந்துவந்த நிலையில் பட்ட துன்பங்கள், நடந்துவந்த பாதையில் என்ற கட்டுரையில் காட்டப்பட்டதுடன் கவிதைகள், சிறுகதை, மாவீரர் வரலாறு உட்பட பல சிறப்புக்கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. ■

## 14 நாட்களில்......

ளில் இறங்கியுள்ளது. வவுனியாவில் தமிழர்கள் வங்கிச் சேவைகளைப் பெறக்கூடிய வகையில் துரித கதியில் வங்கிச் சேவைகளை வவுனியாவில் விஸ்தரித்து வருகிறது. இதே போல கடவுச்சீட்டு அலுவலகம், பிறப்பு சான்றிதழ் வழங்கும் அலுவலகம் போன்றவற்றையும் வவுனியாவில் திறந்து, தமிழர்கள் இங்கேயே இச்சேவைகளைப் பெற ஏற்பாடு செய்கிறது. இதன்மூலம் இதுவரை தமிழர்கள், புலிகளுக்கு அஞ்சித்தான் கொழும்புக்கு வருகின்றார்கள் என்று சிறீலங்கா அரசு அளந்து வந்த கதையின் உண்மை நிலை நிரூபணம் ஆகியுள்ளது. தமிழர்கள் எதற்காக கொழும்புக்கு வருகிறார்கள் என்பதை இப்போதாவது சிறீலங்கா அரசு தானே தனது செயலால் வெளிப்படுத்தி நிற்கின்றது.

இதற்கிடையே இதுகாலவரை கொழும்பு பாதுகாப்பான இடமெனக்கூறி, தமிழர் தாயகங்களில் இருந்து தம்மை தனிமைப் படுத்திக் கொண்ட தமிழர்கள் பலர் கூட, வெலிக்கடை போன்ற சிறைக்கூண்டுகளில் வைத்து தமிழர் தாயகத்தின் தேவையை உணரும் ஞானம்பெற்று வருகின்றனர்.

சிறீலங்கா அரசு, 'ஒரு தீவுக்குள் இருநாடுகள்' என்ற உண்மையை செயலளவில் ஏற்று வருகிறது. இப்பொழுது தமிழர்களை அவர்கள் நாட்டு எல்லை நோக்கி தள்ளுகிறது. இதனைப் பற்றிக் கருத்துத் தெரிவித்த அரசியல் அவதானி ஒருவர், ஒரு நாடு தானாகவே இரண்டு நாடுகளாகப் பிரிவதன் செயலுருவ வெளிப்பாடே வவுனியாவுடன் தமிழர் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த முயலும் செயல்" என்றார். ■

## ஐரோப்பிய....

வெளிநாட்டவர்கள் பெருமளவில் வந்துசேருவதால் பல வழிகளிலும் பாதிப்புக்கள் ஏற்பட்டு வருவதாகக் கருதுகிறார்கள். மேற்கு ஐரோப்பாவில் வெளிநாட்டவர்களுக்கு எதிரான குழுக்கள், அமைப்புக்கள் உருவாவதற்கும் வளர்ந்து வருவதற்கும் இனவேற்றுமை உருவாவதற்கும் தங்கள் நாடுகளில் ஏற்படும் உள்நாட்டு பொருளாதார, சமூகப் பிரச்சினைகளின் மாறுபாட்டிற்கும் அகதிகள் வருகை அதிகரித்து வருவதுதான் காரணம் எனக் கருதுகிறார்கள். உண்மையான அரசியல் காரணங்களுக்காக அல்லாமல் பெருமளவில், பொருளாதாரக் காரணங்களுக்காகத்தான் அகதிகள் வருகிறார்கள் என்ற கணிப்பு மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இருக்கின்றது. பெருமளவிலான அகதிகள் சட்ட விரோதமாகத்தான் வருகிறார்கள் என்றும், இவர்கள் தங்களுடன் உண்மையான சட்டபூர்வமான தஸ்தாவேஜுக்கள், கடவுச் சீட்டுக்களை எடுத்து வருவதில்லையென்றும் பிழையான சட்டவிரோதமான விசாக்களுடன் பிரயாணம் செய்கிறார்கள் என்றும் கணிப்பிட்டுள்ளார்கள். இவ்வாறு, இவர்கள் வெளிநாடுகளுக்குள் வந்து அகதி நிலைக்கு விண்ணப்பிப்பதால் அவர்களை ஒன்றும் செய்ய முடியாமலுள்ளது. சர்வதேச அகதிகள் சட்டத்தின் கீழ் அவர்களை ஏற்க வேண்டிய நிலையில் மேற்கு ஐரோப்பிய நாடுகள் உள்ளன. இப்படியாக சட்டவிரோதமாக, தகுந்த உண்மையான ஆவணங்களின்றி அகதிகளாக வருபவர்களின் தொகை அதிகரிப்பதால், அந்நாடுகளில் சட்டவிரோதச் செயல்கள், பாரிய குற்றச் செயல்கள், போதை வஸ்துக் கடத்துதல், போதைவஸ்து வியாபாரம், பாலியல் குற்றங்கள் என்பன அதிகரிக்கின்றன எனவும் இப்படியான செயல்களில் வெளிநாட்டவர்களும் அகதிகளும் கணிசமான விகிதாசாரத்தில் ஈடுபட்டுள்ளனர் எனவும் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பொலிசார் கூறுகிறார்கள். அகதிகள், வெளிநாட்டவர் தொகை அதிகரிப்பதால் நாடுகளில் இனரீதியான துவேசங்கள், நாசிக் கொள்கைகள் - வெளிநாட்டவர்களுக்கான எதிர்ப்புச் செயற்பாடுகள் வளர்கின்றன. இளைஞர் சமுதாயம் வீட்டுப் பிரச்சினை, வேலையில்லாத் திண்டாட்டம், சமூகப் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ள இதுதான் காரணமெனக் கருதப்படுகிறது. இந்த விரக்தியினால் இளைஞர் சமுதாயம் வெளிநாட்டவர்களுக்கு எதிரான வன்செயல்களில் ஈடுபட முற்படுகிறது எனவும் கருதப்படுகிறது.

எனவேதான் ஐரோப்பிய சமூக நாடுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து, அகதிகள் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணவேண்டுமென தீர்மானித்துள்ளன. எந்தெந்த வழிமுறைகளைக் கையாண்டு எப்படியான முறைகளில் அகதிகள் வருகையைக் கட்டுப்படுத்தலாம், குறைக்கலாம் எனத் தீவிரமான கணிப்பீடுகளைச் செய்து வருகின்றன. எல்லா நாடுகளும் ஒருமித்து தங்கள் தங்கள் உள்நாட்டுக் கொள்கைக்கு அமைய ஐரோப்பிய சமூக ஒன்று சேர்க்கைக்கு முன்னர் அகதிகள் பிரச்சினைக்கான தீர்வொன்றை மேற்கொள்ள முற்பட்டு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. 1993 ஆம் ஆண்டில் எல்லா நாடுகளும் சேர்ந்து ஒரு தீவிரமான நல்ல முடிவை எடுப்பதற்கான அத்திவாரமாக அது அமைகிறது. மேற்கு ஐரோப்பாவுக்குள் வரும் அகதிகளில் பெரும்பாலானவர்கள் கிழக்கு ஐரோப்பாவிலிருந்தும், ஏனையவர்கள் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஊடாகத்தான் வருகிறார்கள் என்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்தந்த நாட்டு விமான நிலையங்களுக்கு ஊடாகவோ, துறைமுகங்களுக்கு ஊடாகவோ அகதிகள் வருவது குறைவு எனவும் வேற்று நாட்டு எல்லைகளுக்கு ஊடாகத்தான் மேற்கு நாடுகளுக்கு வருகிறார்கள் எனவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால் எல்லைகளைக் கட்டுப்படுத்த வேண்டுமெனத் தீர்மானித்துள்ளார்கள். (தொடரும்)

# நலம், நலமறிய ஆவல்!

- புதுவை இரத்தினதுரை



என்னினிய நண்பனே!
அகதியாகித் திசைகள் எங்கும்;
அலையும் தமிழனே!
இங்கிருந்த உன் வேர்களை வெட்டி,
அந்நிய மண்ணில்,
இருப்பிழந்து இருப்பவனே!
உன் கடிதம் கிடைத்தது.
வாசித்தபோது,
வரிகளுக்குள்ளே,
உன் முகத்தைத் தேடினேன்.
எல்லாமே முகமிழந்திருந்தன.
சில முகமூடி போட்டிருந்தன.
அதனால்,
பழைய நண்பனைப் பார்க்க முடியவில்லை.
நண்பனே!
நீயும், நானும் பேசிக்களித்த
பூமிக்குக் குடைபிடிக்கும் "பூவரசமரம்"
சைக்கிள் பழகிய "கிழுவரை வயல்"
பன்றித்தலைச்சி அம்மன்கோவிலுக்கு
பங்குனி மாதப் பொங்கலுக்காக...
நாங்கள் நடந்த "அந்தத்தெரு"
மனோன்மணி அக்கா மாடுகள் மேய்த்த
"அந்திரானைத் தரவைப் பெருவெளி"
எல்லாமே இங்கே இருக்கின்றன.
நண்பனே!
போருக்கு அஞ்சி இவையொன்றும் புலம்பெயரவில்லை.
குண்டுக்குப் பயந்து இவைகள் குடிபெயரவில்லை.
ஆனால்...... நீ....
எனக்குச் சிரிப்பாக இருக்கிறது.
பனைமரத்திற்கு நிழலில்லை என்றுதானே,
பறந்தாய்.
வேற்று நாட்டுப் பன்னீர் மரநிழல்,
எத்தனை காலத்திற்கு இதமளிக்கும்?
கால்களைத் தழுவும் நீரோடை,
பஞ்சு முகில் முகம்துடைக்கும் பனிமலை,
"ஸ்நோ" பூ தூவும் புழுதியற்ற தெருக்கள்,
பதனப் பெட்டியை மெல்லத் திறந்தால்...
முகம் காட்டும் "கூல்பியர்"
இங்கு இல்லைத்தான்,
என்றாலும் மகிழ்ச்சியாக இருக்கின்றோம்
"ஏதோ ஒரு மாதிரி வாழ்கின்றோம்"
என்பது போல் அல்ல.....
குளியல் அறையில் ஆடைகள் அற்று
குளிக்கும் சுகமிருக்கிறதே,
அது போன்ற "ஆனந்தவாழ்வு".
குண்டு வீச்சு விமானங்கள்,
அடிக்கடி வரும்.
காலையில் "அடியளவு அலுவல்" போல,
அதுவருவதும் நாளாந்தக் கடமையாகி விட்டது
என்றாலும் நீ எழுதியதுபோல,
"பதுங்கு குழியல்ல எங்கள் படுக்கையறை"
இங்கே,
நிலவு கேட்டுப் பிள்ளைகள் அழுவதில்லை
இப்போது "புக்காரா"வைப் பிடித்துத் தாட்டாம்.
"உலங்குவானூர்தி"யின் விசிறிக் காற்றில்தான்,
நாங்கள்,
முழுகிய தலையை உலர்த்திக் கொள்ளுகின்றோம்.
உனக்கு ஆச்சரியமாக இருக்கலாம்.
ஆனால் உண்மை.
இங்கே இந்த வீரம் விளையுமென்று,
எவர்தான் எதிர்பார்த்தார்கள்.
உன் மகளின் புகைப்படம் அனுப்பியிருந்தாய்.
பொலிவாய் இருக்கிறாள்.
எஞ்ஜினியர் மாப்பிள்ளை பேசுவதாக எழுதியிருந்தாய்.
எல்லாம் ஒப்பேறி விட்டதா?
அவளின் வசந்தத்திற்கு எனது வாழ்த்தைக் கூறு.
என் மகளுக்கும் சுகம் கூறச்சொன்னாய்,
சொல்லலாம்,
அவள்தான் என் பக்கத்தில் இல்லையே!
காலமிட்ட கட்டளையை ஏற்று,
களத்திற்குப் போய்விட்டாள்.
பயிற்சி முடிய மாதங்கள் ஆகலாம்.
விடுமுறையில் வீடு வரும் போது,
உன் விருப்பத்தைக் கூறுகின்றேன்.
வேறு என்ன?
நலம், நலமறிய ஆவல்!

நன்றி: வெளிச்சம்




Printed by Observer Group Newspapers.